# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 13 வள்ளுவர் ஆண்டு2029 பங்குனி 12 (26–03–1998)வியாழக்கிழமை UTHAYAN–A Lively National Tamil Daily கதிர்:102


## திருமலை புளொட் அலுவலகம் முன் ஓட்டோ சாரதிகள் ஆர்ப்பாட்டம்!

### கடத்தப்பட்டவரை விடுவிக்கக் கோரிக்கை

திருகோணமலை, மார்ச் 26

திருகோணமலை நகரில் இருந்து கடத்திச் செல்லப்பட்ட ஓட்டோ சாரதி ஒருவரை விடுதலை செய்யக் கோரி நேற்று பெரும் எண்ணிக்கையான ஓட்டோ சாரதிகளும் கடத்தப்பட்டவரின் உறவினர்களும் திருமலையில் உள்ள புளொட் அலுவலகம் முன் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

32 வயதான மகாலிங்கம் விஜயகுமார் என்பவரே கடத்தப்பட்ட ஓட்டோ சாரதி ஆவார்.

கடந்த 21 ஆம் திகதி இவர் திருமலையில் உள்ள ஓட்டோ தரிப்பு நிலையத்தில் வைத்துக் கடத்தப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இவர் கடத்தப்பட்டது தொடர்பாக புளொட்டின் திருமலை அலுவலகத்துக்கு எதிராக பொலீஸில் முறைப்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை ஓட்டோ சாரதிகள் ஓட்டோ வாகனங்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி மோதலில் புலி உறுப்பினர் மரணம்

வவுனியா மார்ச் 26

கிளிநொச்சியில் நேற்று முன்தினம் . படையினருடன் ஏற்பட்ட மோதலில் புலிகள் உறுப்பினர் ஒருவர் களப்பலியானார் என அறிவிக்கப்பட்டுள்ளது.

வீரவேங்கை ஈழவாகன் (கனகரத்தினம் ரவீந்திரன்—யாழ்ப்பாணம்) என்பவரே உயிரிழந்தவராவார்.

இதே வேளை கடந்த 23 ஆம் திகதி மாங்குளத்தை அண்டிய பகுதியில் நடைபெற்ற மோதலில் வீரவேங்கை சீலன் (மகாலிங்கம் துஷ்யந்தன்—யாழ்ப்பாணம்) என்பவரும் களப்பலியானதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மாங்குளத்துக்கு தென் மேற்கே புதுமச்சிளாம்குளம் பகுதியில் நேற்று சிறு மோதல்களும் ஷெல் தாக்குதல்களும் இடம்பெற்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ–ரீ)

# கொழும்பில் படையினர் தொடர்ந்து தேடுதல்!

## மீசாலையில் சூட்டுக்கு ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், மார்ச் 26

கடந்த திங்கட்கிழமை இரவு 1.45 மணியளவில் மீசாலை கொடிகாமம் பகுதியில் ஊரடங்கு வேளையில் நடமாடியவர் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

## 90 பேர் விசாரணையில்

கொழும்பு, மார்ச் 26

**இராணுவத்தினரும் பொலீஸாரும் கூட்டாக கொழும்பில் நேற்றும் நேற்று முன்தினமும் நடத்திய தேடுதலின் போது சந்தேகத்தின் பேரில் 90 பேர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் விசாரணை செய்யப்படுகின்றார்கள் என்று அரசதரப்புச் செய்திகள் தெரிவித்தன.**

கைதானோரில் அனேகமானோர் தமது அடையாளத்தை நிரூபிக்க தவறியுள்ளார்கள் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபர்கள் பற்றிய விவரங்களை அறிந்து கொள்ள விசேட பொலீஸ் குழுக்கள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளன, என்றும்—

அப்பாவிகள் விரைவில்

(10 ஆம் பக்கம் பார்க்க)

## பயணிகள் மீதான கட்டுப்பாடு தளர்வு

மன்னார், மார்ச் 26

கொழும்பு – மன்னார் பஸ்களில் பயணிகள் செல்ல விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் இன்று முதல் தளர்த்தப்படவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மன்னாரில் இருந்து மதவாச்சி ஊடாகக் கொழும்பு செல்லும் பயணிகள் இடைநடுவில் ஏறத் தடைவிதிக்கப்பட்டிருந்தது.

இந்தத் தடை இன்று நீக்கப்பட்டு பயணிகள் முக்கிய

( 10ஆம் பக்கம் பார்க்க)

## கன்னங்குடா தாக்குதல்

மட்டக்களப்பு, மார்ச் 26

நேற்று அதிகாலை மட்டக்களப்பு கன்னங் குடாவில் படையினர் மேற்கொண்ட தாக்குதலில் புலிகளின் முகாம் ஒன்று அழிக்கப்பட்டதாக பாதுகாப்புத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அதிகாலை 2.30 மணி அளவில் ஒரு விடுதலைப் புலி உறுப்பினர் கொல்லப்பட்டதாகவும் ரி 56 ரக துப்பாக்கி ஒன்றும் ஆறு எறி குண்டுகளும் கைப்பற்றப் பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இம் முகாமில் இருந்தே மட்டக்களப்புப் பகுதியையும் அதனைச் சூழவுள்ள பகுதிகளையும் இராணுவ நிலையங்களையும் விடுதலைப் புலிகள் மோட்டார் கொண்டு தாக்கி வந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ–8–ரீ)

## கைதானவர்களில் ஆலயத்தின் பிரதமகுரு மற்றும் உதவியாளர்கள்

கொழும்பு, மார்ச் 26

கொழும்பில் கைதானோரில் கொம்பனித்தெரு சிவசுப்பிரமணிய ஆலய பிரதம குரு மற்றும் அவரது உதவியாளர்கள் —

மருதானை கப்பித்தாவத்தைபிள்ளையார் கோயில் பிரதம குருவின் மகள் திருமதி சுவாமிநாதன் அவரது பிள்ளைகளான வித்தியா, பிரசன்னா, கிருபாகரி — ஆகியோரும் அடங்குவர்.

திருமதி சுவாமிநாதன் தமது பிள்ளைகளுடன் தென்னாபிரிக்கா சென்று அங்கு ஆலயப் பணியில் ஈடுபட்டுள்ள தமது கணவருடன் தங்கியிருந்துவிட்டு சில தினங்களுக்கு முன்பே கொழும்பு வந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதான இவர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்கும்படி அகில இலங்கை இந்து மாமன்றச் செயலாளர் கந்தையா நீலகண்டன் மற்றும் தமிழர் விடுதலைக் கூட்டணி தலைவர் மு. சிவசிதம்பரம் ஆகியோர் ஜனாதிபதியிடம் முறையிட்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள சபரிமலை சாஸ்தா பீடத்தைச் சேர்ந்த ஐயப்பதாசக் குருக்களும் இவர்களை விடுதலை செய்யுமாறு கோரியுள்ளார்.

## முகாமை மூடுவதற்கு அகதிகள் எதிர்ப்பு!

வவுனியா, மார்ச் 26

வவுனியா மகா வித்தியாலயத்தில் அமைந்துள்ள அகதி முகாமை மூடி அகதிகளை வேறு இடங்களுக்கு மாற்ற நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் —

அந்த முகாமை விட்டு வெளியேற அகதிகள் மறுப்புத் தெரிவித்தனர்.

இந்த முகாமில் தங்கியிருந்த 978 அகதிகளையும் வேறு இடத்துக்கு மாற்றுமாறு பாதுகாப்புத் தரப்பினர் வலியுறுத்தி வந்ததையடுத்து, இந்த அகதிகளை வேறு இடத்துக்கு மாற்ற வவுனியாச் செயலகம் நேற்று ஏற்பாடு செய்திருந்தது.

இவர்களை ஏற்றிச்செல்ல பஸ்களும் முகாமுக்கு வந்துசேர்ந்தன.

ஆனால் அகதிகள் செல்ல மறுத்து முகாமுக்குள்

(10 ஆம் பக்கம் பார்க்க)

### ரெலோ அமைப்பைச் சேர்ந்த

## ஆரையம்பதி பிரதேசசபைத் தலைவர் துப்பாக்கிச் சூட்டில் தப்பினார்!

### தாக்குதலில் மற்றும் ஓர் உறுப்பினர் காயம்

மட்டக்களப்பு, மார்ச் 26

ரெலோ அமைப்பைச் சேர்ந்த மட்டக்களப்பு ஆரையம்பதி பிரதேசசபைத் தலைவரைக் கொல்லும் முயற்சி முறியடிக்கப்பட்டுவிட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பொழுது இடம்பெற்ற மோதலில் ரெலோ உறுப்பினர் ஒருவர் காயமடைந்தார்.

சைக்கிளில் பொதிகள் கொண்டுவருவது போல் வந்து பிரதேச சபை அலுவலகத்துக்குள் துப்பாக்கி நபர்கள் நுழைய முற்பட்டனர் என்றும் —

அங்கு காவலுக்கு நின்ற ரெலோ உறுப்பினர்கள் தடுக்க முயன்றபோது துப்பாக்கிச் சண்டை மூண்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

காயமடைந்தவர் வி. புஸ்பராஜா (வயது 26) என ரெலோப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

அந்நேரம் சபைத் தலை

(10 ஆம் பக்கம் பார்க்க)

### வன்னியிலுள்ள

## படையினர் பலருக்கு மலேரியா, அம்மை!

வவுனியா, மார்ச் 26

''வெற்றி உறுதி'' இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள துருப்பினர்களில் தினமும் 10 முதல் 15 பேர் மலேரியா, அம்மை போன்ற நோய்களால் பீடிக்கப்பட்டு அநுராதபுரம், கொழும்பு ஆஸ்பத்திரிகளில் அனுமதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இந்த நோயால் பீடிக்கப்படுபவர்களுக்கு வழங்கப்படும் மருந்து வகைகளை அவர்கள் சரியான முறையில் பயன்படுத்துவதில்லை என்றும் —

இதனாலேயே பெரும்பாலானவர்கள் இந்நோய்களுக்குள்ளாவதாகவும் வைத்திய வட்டாரங்கள் தெரிவித்தன.

கடும் வெப்ப நிலையே இந்த நோய்கள் ஏற்படக் காரணமாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது.

(இ–164–3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

திருமதி
## புனிதவதி கந்தஞானி
(ஜேர்மனி)

வடக்கு நாரந்தனை ஊர்காவற்றுறையைச் சேர்ந்த திருமதி புனிதவதி கந்தஞானி 25-03-1998 அதிகாலை 3.45 மணியளவில் ஜேர்மனியில் இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நாகநாதபிள்ளை கந்தஞானி மாஸ்டரின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற செல்லையா — அமிர்தம் (சங்குவேலி) தம்பதிகளின் ஏகபுத்திரியும், இரத்தினசிங்கத்தின் (கொழும்பு) அன்புச் சகோதரியும், சிவகுமாரி (ஜேர்மனி)யின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சபாநாயகத்தின் அருமை மாமியாரும், சிவாஜினி, ஸ்கந்தபாலன், ஜெகத்ஜனனி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்றவர்களான இராசம்மா, தங்கம்மா, அமிர்தம், நல்லம்மா மற்றும் சிவஞானம் (கனடா), ஞானசௌந்தரி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் ஜேர்மனியில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி ஞானசௌந்தரி காரானசிங்கம்
(மைத்துனி)

நாரந்தனை வடக்கு,
ஊர்காவற்றுறை.
(54322)

## கதிரவேலு சின்னம்மா

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த கதிரவேலு சின்னம்மா அவர்கள் 24-03-98 அன்று காலமானார்.

அன்னார் சின்னப்பு கதிரவேலுவின் அன்பு மனைவியும், பராசக்தி, நாகபூஷணி அம்மாள், நடேசலிங்கம் (பழனி, ஜேர்மன்), குமரகுருபரன் (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற சின்னத்துரை (கல்வித்திணைக்களம்) மற்றும் மாணிக்கவாசகர், அமுதகௌரி (ஜேர்மன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், உதயகுமார் (ஜேர்மன்), வரதன் (லண்டன்), அல்லிகிருபாகரன் (ஜேர்மன்), விபுலன் (டென்மார்க்), பாமா, பத்மா (லண்டன்), ராகுலன், சுகுணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், நிலாணி (ஜேர்மன்), கார்த்திகன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 26-03-98 வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நவக்கிரியில் நடைபெற்று பூதவுடல் நிலாவரை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
நா. மாணிக்கவாசகர்
(மருமகன்)

நிலாவரை,
நவக்கிரி,
புத்தூர்.
(54316)

## தில்லையம்பலம் பூபாலசிங்கம்
(ஓய்வுபெற்ற சிறாப்பா இலங்கை வங்கி)

மானிப்பாய் தில்லை மகாலைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும், தற்போது மட்டக்களப்பில் வசித்து வந்தவருமாகிய தில்லையம்பலம் பூபாலசிங்கம் 23-03-98 அன்று மட்டக்களப்பில் காலமானார்.

அன்னார் தவபாக்கியத்தின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற விஜயகுமார், ஜெயகுமார், பாலகுமார், திருமதி விஜயராணி சபாநாதன், ஜெயராணி, திருமதி இந்திராணி இராஜன், கலைவாணி (யாழ். மருத்துவபீட மாணவி), கவிதா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (26-03-98) வியாழக்கிழமை மாலை 2.30 மணியளவில் மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் நடைபெறும் என்பதை அறியத்தருகின்றோம்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
யசோ போலிங்கம்
(பெறாமகள்)

82/4, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(54324)

## பூதப்பிள்ளை இளையபிள்ளை

தெல்லிப்பளை மேற்கு தையிட்டிப்புலத்தை (சோதி வாசம்) பிறப்பிடமாகக் கொண்ட காலஞ்சென்ற நாராயணபிள்ளை பூதப்பிள்ளையின் துணைவியாரான இளையபிள்ளை அவர்கள் 23-3-98 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று மாலை தவிர்க்க முடியாத காரணங்களினால் நடைபெறவில்லை. எனவே இறுதிக் கிரியைகள் இன்று (26-3-98) வியாழக்கிழமை பிறபகல் 3.30 மணியளவில் தற்போதைய இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தாவடி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பூ. சோதிநாதன் [மகன்]
பூ. கமலநாதன் [மகன்]
அ. பாலசந்திரன் [மருமகன்]

'குமுதம்',
சீக்கோ ஒழுங்கை,
காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில் மேற்கு.
(54325)

## மெய்வல்லுநர் போட்டி

கொடிகாமம் அரசினர் தமிழ் வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை வெள்ளியன்று பாடசாலை அதிபர் அ. திருநாவுக்கரசு தலைமையில் நடைபெறும்.

தென்மராட்சி கல்விக் கோட்ட உதவி கல்விப்பணிப்பாளர் இ. கைலைநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-27)

## அச்சுவேலிக்கு தொலைபேசி

அச்சுவேலிப் பகுதிக்கும் வெளியூர் தொலைபேசி வசதி கிடைத்துள்ளது.

அச்சுவேலி — இராச வீதிச் சந்தியில் — மகா வித்தியாலயத்திற்கு முன்பாக — தனியார் ஒருவருக்கே இந்தத் தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

உள்நாட்டு, வெளிநாட்டு அழைப்புகளை அங்கிருந்து மக்கள் பெறக்கூடியதாக உள்ளது. (ஐ-11)

## போதை ஒழிப்பு தொடர்பான போட்டிகள்

போதைப்பொருள் ஒழிப்பு தொடர்பாக மாணவர் மத்தியில் போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போதைப் பொருள் ஒழிப்புக் கல்விச் செயற்பாடின் கீழ் இப்போட்டிகள் பாடசாலை, கோட்ட, வலய, மாவட்ட மட்டங்களில் நாடளாவிய ரீதியில் நடைபெறவுள்ளன.

பேச்சு, கட்டுரை, கவிதை, நாடகம், சிறுகதை ஆகியவற்றில் போட்டிகள் நடைபெறும். (ஐ-11)

எமது வீடியோ
CD வெளியீடு!
கலர் கனவுகள்
எம்மிடம் புதிய படப் போஸ்டர்கள் விற்பனைக்குண்டு.
சுப்பஸோ வீடியோ
யாழ்ப்பாணம்.
(சி/3209)

யாழ்.
றீகல் வெண் திரையில்
91, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
25 அடி அகலத் திரையில்
இன்று முதல்
கார்த்திக், நக்மா,
நடித்த
மேட்டுக்குடி
அடுத்த வெளியீடுகள்
சூரியவம்சம்
குருதிப் புனல்
தினசரி:- 10-30, 2-30
(பழைய நேரம்)
(54326)

லிபேட்டி தியேட்டர்
அச்சுவேலி.
இன்று மட்டும்
பிரபுதேவா - கஜோல்
நடித்த
மின்சாரக் கனவு
வெள்ளி மட்டும்
எம். ஜி. ஆர். நடித்த
மீனவ நண்பன்
மோகன் - அம்பிகா
கவுண்டமணி, செந்தில்
நடித்த
இதயக் கோயில்
நேரம்:- 10-30, 2-30
(54075)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கார்த்திகேசு சேதுப்பிள்ளை

சண்டிலிப்பாயை வதிவிடமாகக் கொண்ட திருமதி கார்த்திகேசு சேதுப்பிள்ளை 23-03-1998 அன்று கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ் சென்ற எம். கார்த்திகேசு (M. B. E. இளைப்பாறிய இஞ்சினியர்) அவர்களின் அன்புமனைவி ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 24-03-98 இல் கொழும்பில் தகனம் செய்யப்பட்டது.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கா. சண்முகநாதன்
(மகன்)

தொட்டிலடி,
சங்கானை.
(54302)

திருமதி
## கந்தையா புவனேஸ்வரி

கைதடி வடக்கைப் பிறப்பிடமாகவும், சிறுப்பிட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா புவனேஸ்வரி (கைதடி அம்மா) அவர்கள் 24-3-1998 ஆம் திகதி சிவபதமடைந்துவிட்டார்.

இவர் ஓய்வுபெற்ற ஆசிரியர் திரு. மயில்வாகனம் கந்தையா அவர்களின் அன்புத் துணைவியாரும், வடிவேலன் (சிங்கப்பூர்), பரமேஸ்வரி (மலேசியா), கமலாம்பாள் (கோலாலம்பூர்), ஜெயலக்சுமி, சரவணபவானந்தன், வேலாயுதம் (லண்டன்), ஆகியோரின் அன்புச் சகோதரியும், காசிநாதர் சுப்பிரமணியத்தின் (பாணர்) மருமகளும், பரிமளாதேவி, சிவஞானசூரியர் (R. M. P, கொழும்பு) ஜெயபாலகணேசன் (இ.மி.ச., திருகோணமலை). சிவனேசன் (இலங்கை வங்கி, கொழும்பு தலைமை அலுவலகம்), இரஞ்சினிதேவி (ஜேர்மனி), விமலாதேவி (ஜேர்மனி), சுசிலாதேவி (கனடா), வசந்தாதேவி (ஜேர்மனி), நித்தியானந்தன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), அமரர் சச்சிதானந்தன் (பொலீஸ் திணைக்களம்), இராஜேஸ்வரன் (கனடா), சத்தியசீலன் (பொறியியலாளர், கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், பத்மராஜன், அம்பிகாதேவி, ஸ்காந்தா, நந்தினி, பாலசாந்தர், பாலேந்திரன், நடராஜன், ராஜ்குமார், யசோதா ஆகியோரின் மாமியாரும், அனித்தா, ஜீவகி, சௌமியா, பிரசன்னரூபன், சுஜிதா, லஜிதா (உயர்தர மாணவிகள், புத்தூர் சோமஸ்கந்தா கல்லூரி), செந்தூரன் (யாழ். மத்திய கல்லூரி), பானுகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), தக்ஸினி, சரவணன், சுகிர்தினி, நிரோஜினி, பானுரதன், ஆரூரன், ஆர்த்திகன், கார்த்தியாயினி ஆகியோரின் பாசமிகு பாட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ம. கந்தையா
(கணவர்)

சிறுப்பிட்டி தெற்கு,
நீர்வேலி.
(54309)

## பண்டிதர் க. வேலுப்பிள்ளை
(B.A. Eng. Trained, Tamil Trained, ஓய்வு பெற்ற ஆசிரியர், சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

சாவகச்சேரி கல்வயலைச் சேர்ந்த பண்டிதர் க. வேலுப்பிள்ளை 21-3-98 அன்று இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை பார்பதிப்பிள்ளை தம்பதிகளின் சிரேஷ்ட புதல்வனும் சரஸ்வதியின் அன்புக் கணவரும், பண்டிதர் சங்கரப்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற அருணாசலம் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற நடராசா (இலிகிதர்), காலஞ்சென்ற சிவகாமிப்பிள்ளை ஆகியோரின் சகோதரரும் Dr. சிவசுப்பிரமணியம் (MRCP Royal Forces Hospital Saudie Arabia), திருமதி இ. சிவகாமசுந்தரி, திருமதி அ. சிவயோகம் (ஆசிரியர், கன்னியர் மடம் மகா வித்தியாலயம், யாழ்ப்பாணம்), செல்வி சிவஞானம் (சாவகச்சேரி பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்), Dr. சிவபாதசுந்தரம் (Ph. D Atomic Research Institute லண்டன்) செல்வி சிவலோகநாயகி, திருமதி Dr. சி. சிவகுமாரி (MRCOG லண்டன்) ஆகியோரின் தந்தையும், திருமதி Dr. சி. சிவகாமசுந்தரி, திரு. த. இராசலிங்கம் (Telephonist, OTS) Lion Dr. S.S. அருளானந்தம், Dr. சுசீலா (U K), Dr. மோகன் (பல் வைத்தியர், கனடா), சித்திராபதி (பொறியியலாளர்) ஆகியோரின் மாமனாரும், சரவணபவானந்தன் (Barrister U K) Dr. திருமுருகானந்தன் (U K) அரவிந்தன் (பொறியியலாளர் U K), ஜனார்த்தனன் (பொறியியலாளர் U.S.A.), அன்னவதனி (பல் வைத்திய பீடம், பேராதனைப் பல்கலைக் கழகம்), சுந்தரவதனி (சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), கஜவதன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), நரேன் விக்கினேஸ் (U K), சுரேன் கணேஸ் (U K), டிவினி (கனடா), டிலானி (கனடா), தனுஷா (U K), நிரோஷா (U K), ஆயிஷா (U K) ஆகியோரின் அன்புப்பேரனும், திரு. த. இராதாகிருஷ்ணன் (ஓய்வு பெற்ற ஆசிரியர்), காலஞ்சென்ற கதிரமலை (இலிகிதர்), சபாநாதன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரது இறுதிக் கிரியைகள் 26-3-98 வியாழக்கிழமை அன்னாரது இல்லத்தில் மு. ப. 11 மணிக்கு ஆரம்பித்து பி. ப. 3. 00 மணிக்கு பூதவுடல் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
Dr. V. சிவசுப்பிரமணியம்
(மகன்)

கல்வயல், சாவகச்சேரி. (சி/3206)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம்

# ஒரிசா, மேற்கு வங்கத்தை கடும் புயல் தாக்கியது!

## 120 பேர் பலி! 1,200 பேர் காயம்

புதுடில்லி, மார்ச் 26

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்திலும், ஒரிசாவிலும் வீசிய கடும் புயற் காற்றினால் 120-க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர், சுமார் ஆயிரத்து 200 பேர் காயமடைந்தனர்.

10 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வீடுகளை இழந்துள்ளனர்.

மேற்கு வங்க கரையோர மித்தப்பூர் மாவட்டத்தில் வீசிய புயலினால் 112 பேர் உயிரிழந்தனர். இவர்களில் 40 பேரின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன.

அதேநேரம் ஒரிசாவின் பாலஷேர் மாவட்டத்தில் வீசிய கடும் காற்றினாலும், இடி மின்னலாலும் தாக்குண்ட பாடசாலைக் கட்டடம் ஒன்று இடிந்து விழ்ந்ததில் 16 குழந்தைகள் உட்பட 20 பேர் பலியாகியுள்ளனர். இப் புயல் மாதப்பூர்பைரத் மாவட்டங்களில் பெரும் அழிவை ஏற்படுத்தியுள்ளது.

மேற்கு வங்க முதலமைச்சர் ஜோதிபாசு இந்த இழப்புக்கள் குறித்து தமது ஆழ்ந்த மனவருத்தத்தைத் தெரிவித்ததுடன் பாதிக்கப்பட்டோருக்கு உதவி நிதியாக ஒருகோடி ரூபாவை வழங்கியுள்ளார்.

இந்தப் புயல் அனர்த்தம் குறித்து புதிய பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் ஜனாதிபதி கே. ஆர். நாராயணன் ஆகியோரும் தமது கவலையையும் அனுதாபங்களையும் தெரிவித்துள்ளனர்.

(ஐ-ரீ)

# "ரைட்டானிக்" திரைப்படத்துக்கு பதினொரு ஒஸ்கார் விருதுகள்!

லொஸ் ஏஞ்சல்ஸ், மார்ச் 26

ஹொலிவூட் திரைப்பட வரலாற்றில் வசூலில் அமோக சாதனை படைத்த ''ரைட்டானிக்'' என்ற திரைப்படம் 1987 ஆம் ஆண்டுக்கான 11 ஒஸ்கார் விருதுகளை வென்று உலக சாதனை புரிந்துள்ளது.

1959 இல் 'பென்கர்' திரைப்படம் ஈட்டிய அதே சாதனையை தற்போது ரைட்டானிக் படைத்துள்ளது.

''ஒஸ்கார்'' அக்கடமியின் 70 ஆவது விருது வழங்கும் கோலாகல நிகழ்ச்சி நேற்று முன்தினம் லொஸ் ஏஞ்சல்ஸில் நடைபெற்றது. அங்கு வைத்து இந்த பதினொரு விருதுகளும் அறிவிக்கப்பட்டன.

சிறந்த தயாரிப்பு, சிறந்த திரைக்கதை, சிறந்தநடிப்பு, சிறந்தநடிகர்சிறந்த எடிட்டிங், கலை நுணுக்கம், பாடல்கள், புகைப்படக் கலை, ஒலி, ஒளிஅமைப்புகள் உட்பட 11 துறைகளில் இத் திரைப்படம் சிறந்த திரைப்படமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கப்பல் விபத்துச் சம்பவம் ஒன்றின் பின்னணியில் அமைந்த காதல் கதையே ரைட்டானிக்.

பிரமாண்டமான முறையில் மிக அற்புதமாக வடிவமைக்கப்பட்ட 'ரைட்டானிக்' என்ற பிரிட்டிஷ் உல்லாசக் கப்பல் 1912 ஆம் ஆண்டு தனது வெள்ளோட்டத்தின் போது அத்திலாந்திக் சமுத்திரத்தில் பனிப்பாறை ஒன்றுடன் மோதிக் கடலில் மூழ்கியது.

46 ஆயிரம் தொன் நிறையுள்ள அந்தக் கப்பலில் கப்பல் மாலுமிகள், பணியாளர்கள் 891 பேரும், ஆயிரத்து 316 உல்லாசப் பயணிகளும் பயணஞ் செய்தனர். இவர்களில் பெரும்பாலானோர் கோடீஸ்வரர்கள், கலைஞர்கள், பிரபுகள், அரசியல்வாதிகள், விஞ்ஞானிகள்.

பனிப்பாறையுடன் மோதிச் சேதமடைந்த கப்பலில் கடல் நீர் புகுந்தது. சுமார் 2மணிநேர ஜீவமரணப் போராட்டத்தின் பின் கப்பலில் இருந்த பெண்களில் சிலரைத் தவிர ஏனையோர் கப்பலுடன் கடலில் மூழ்கி மாண்டனர்.

இந்தக் கப்பல் பயணத்தின் போது அதற்குள் நடக்கும் காதல் கதை ஒன்றே ''ரைட்டானிக்'' என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டது.

(ஐ-ரீ)

# ஐ. முன்னணியில் இருந்து தி.மு.க. விலகாது!

## கருணாநிதி தெரிவிப்பு

சென்னை, மார்ச் 26

தி.மு.க. ஐக்கிய முன்னணியுடன் தொடர்ந்தும் இணைந்திருக்கும் என்று கருணாநிதி தெரிவித்துள்ளார்.

தெலுங்கு தேசம் கட்சி, அஸாம் கணபரிஷித், தேசிய மாநாட்டுக் கட்சி ஆகியவை ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேறியதன் பின்னர் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றில் கருணாநிதி இதனைத் தெரிவித்தார்.

ஐக்கிய முன்னணியில் இருந்து வெளியேற வேண்டிய நிலைமை எதுவும் தமது கட்சிக்கு இதுவரை ஏற்படவில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

சந்திரபாபு நாயுடுவை மீண்டும் ஐக்கிய முன்னணிக்குகொண்டு வரும்முயற்சிகளை மேற்கொள்கிறீர்களா என்று அவரிடம் கேட்கப்பட்டபோது—

தான் அவ்வாறான முயற்சிகள் எதனையும் மேற்கொள்ளவில்லை என்றும் கருணாநிதி பதிலளித்தார்.

(ஐ-ரீ)

# பலஸ்தீன கைதிகள் ஐ நா. செயலருக்குக்கடிதம்

ஜெரூஸலம், மார்ச் 26

ஐ. நா. பொதுச் செயலாளர் கோபி அனான் இவ்வாரம் இஸ்ரேல் வரும்போது தம்மையும் வந்து சந்திக்கும்படி இஸ்ரேலிய சிறைகளில் இருக்கும் பலஸ்தீனக் கைதிகள் கடிதம் எழுதியுள்ளனர்.

சர்வதேச சட்டங்களை மீறும் நடவடிக்கைகளையும் —

இதற்கு முழுப்பொறுப்பான இஸ்ரேலிய செயற்பாட்டையும் —

ஐ.நா. சபையின் பொதுச் செயலாளர் அறிய வேண்டியது. மிக முக்கியமானது என சிறைக் கைதிகள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

இதேசமயம் இஸ்ரேலின் ஐம்பதாவது ஆண்டு நிறைவு விழாக் கொண்டாட்டங்களையொட்டி 800 சிறைக் கைதிகளுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட உள்ளது. இதற்காக சிறப்புக் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது.

வரும் 30 நாள்களுக்குள் பொது மன்னிப்பு வழங்கப்படவேண்டியவர்களை இந்த சிறப்புக்குழு தீர்மானிக்கும்.

அரச அதிகாரிகள், நீதித் துறையைச் சார்ந்தவர்கள், காவல்துறை, இராணுவம் மற்றும் சிறைச்சாலைப் பிரதிநிதிகள் இந்தச் சிறப்புக் குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

(இ-8)

### உலக அரங்கில்

## அரபுக் குடும்பம் வெளியேற்றம்

பலஸ்தீனம், மார்ச் 26

ஹெப்ரோனில் வகித்து வந்த அரபுக் குடும்பம் ஒன்று இஸ்ரேலியப் படையினரால் பலவந்தமாக அவ்விடத்தை விட்டு வெளியேற்றப்பட்டுள்ளது.

ஹெப்ரோனில் புதிய வீடு ஒன்றை அமைத்து வகித்து வந்த அரபுக்குடும்பமே இவ்வாறு வெளியேற்றப்பட்டுள்ளது. வெளியேற மறுத்த போது கற்கள் நிறைந்த தரையில் இஸ்ரேலியப்படையினரால் இழுத்துச் செல்லப்பட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-ரீ)

# ஆலயச் சூழலில் மிதிவெடிகளை அகற்றி உதவுமாறு கோரிக்கை

சண்டிலிப்பாய், மார்ச் 26

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்திற்கு வடக்குப் புறத்தில் பாணாவெட்டி குளத்திற்கு சமீபமாக புதைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் மிதி வெடிகளை அகற்ற நடவடிக்கை மேற்கொள்ளுமாறு ஆலய புனருத்தாரண சபை வேண்டுகோள் விடுத்துள்ளது.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் ஊடாக இப்பகுதி பாதுகப்புப் படையின்உயரதிகாரிக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள மகஜரில் இக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

சேதமடைந்துள்ள இந்த ஆலயத்தில் பாலஸ்தானம் செய்யப்பட்டு தற்போது புனரமைப்பு வேலைகள் மக்களின் பங்களிப்புடன் துரித கதியில் நடைபெற்று வருகின்றன.

இவ்வாலயத்திற்கு மிகவும் சமீபமாக முன்னர் புதைத்து வைக்கப்பட்டிருக்கும் மிதி வெடிகளில் சிக்கி இப்பகுதியில் மேய்ச்சலுக்கு வரும் மாடுகள் இறந்தும், காயமடைந்தும் உள்ளன.

இதேவேளை

மாதகல் — பண்டத்தரிப்பு பிரதான வீதிக்குச் சமீபமாகவுள்ள முனியப்பர் கோயில் சுற்றாடலில் மிதி வெடிகள் இருப்பதால் அயற் காணிகளில் விவசாயம் செய்வதற்கு விவசாயிகள் அஞ்சுகின்றனர். இதனால் சில காணிகள் செய்கை பண்ணப்படாது வெறும் தரிசு நிலங்களாக கைவிடப்பட்டுள்ளன. இப்பகுதியில் ''மிதி வெடிகள் கவனம்'' என்ற எச்சரிக்கை எழுதப்பட்ட அறிவித்தல் பலகை வைக்கப்பட்டுள்ளது.

(ஐ-135)

## பட்டதாரிகளிடமிருந்து விண்ணப்பம் கோரல்

பல்கலைக் கழகங்களில் நிலவும் ஊழியர் வெற்றிடங்களுக்கு பல்கலைக்கழக மானிய ஆணைக்குழு பட்டதாரிகளிடம் இருந்து விண்ணப்பங்களைக் கோரி உள்ளது.

உதவிப்பதிவாளர், உதவிக் கணக்காளர், உதவிநிதியாளர் ஆகிய பதவிகளுக்கு முதலாந்தரம், இரண்டாந்தரங்களில் சிறப்புப் பட்டங்களைப் பெற்றவர்களிடமிருந்தே விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

மூன்று பகுதிகளிலான எழுத்துப் பரீட்சை நடத்தப்பட்டு அதில் குறைந்த பட்ச 40 புள்ளிகளைப் பெறுவோர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

விண்ணப்பதாரிகள் முழுப் பெயர், விலாசம், பிறந்த திகதி, வயது, இனம், கல்வித் தகைமைகளைக் குறிப்பிட்டு எதிர்வரும் ஏப்ரல் 20 ஆம் திகதிக்கு முன் விண்ணப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளது.

''மேலதிக செயலாளர், மனிதவளம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு 20, வார்ட்பிளேஸ், கொழும்பு—7'' என்றமுகவரியுடன் தொடர்பு கொண்டு விண்ணப்பங்களைப் பெற முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-185)

## வீதி சேதம்

வலி.தென்மேற்கு, மார்ச் 26

நவாலி — வழுக்கையாறு பிரதான வீதி நீண்டகாலமாகத் திருத்தப்படாத நிலையில் குண்டும் குழியுமாக காணப்படுகிறது.

''முன்னேறிப் பாய்தல்'' இராணுவ நடவடிக்கையின் போது சேதமடைந்த வழுக்கையாறு பாலம் இன்னும் [illegible] சாரிகள் விபத்துக்களைச் சந்திக்க நேரிடுகிறது.

(ஐ-135)

# குருநகர் மீனவர் விபரம் சேகரிப்பு

குருநகர், மார்ச் 26

குருநகரில் மீன்பிடித் தொழிலை மட்டும் மேற்கொள்பவர்களின் புள்ளி விவரங்கள் குருநகர் கடற்றொழில் கூட்டுறவுச் சங்கத்தினால் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

குருநகரில் இழுவைறால், பாய்ச்சுவலை, டிஸ்கோ வலை, நைலோன் சிறகு வலை, களங்கட்டி, சங்கு, அட்டைகள் பொறுக்குதல் ஆகிய தொழில்களில் ஈடுபட்டுவருவோரின் விவரங்கள் தனியாகவும், இவர்களால் கொண்டுவரப்படும் கடலுணவுகளைச் சந்தைப்படுத்த கரையில் இருந்து பண உதவி புரியும் குத்தகைத் தொழில் மேற்கொள்வோரின் விவரங்கள் வேறாகவும் சேகரிக்கப்பட்டு வருவதாகவும் குருநகர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் தெரிவித்தது.

(ஐ-51)

## "உ" அட்டை விவசாயிகளுக்கும் மண்வெட்டி கிடைக்கும்

வலி. தென்மேற்கு, மார்ச் 26

சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் இம் முறை விவசாய சம்மேளனங்களில் பதிவு செய்த ''உ'' அட்டை விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் மண்வெட்டிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான பட்டியலை கிராம அலுவலர்கள் — விவசாய சம்மேளனங்களுடன் இணைந்து தயாரித்து வருகின்றனர்.

குறைந்தளவான ஒதுக்கீடே இம்முறை ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் ஒதுக்கப்பட்ட போதும் மண்வெட்டி தெரிவில் இம் முறை உத்தியோகஸ்தர்களுக்கும் இடம் வழங்கப்படவுள்ளது.

கடந்த முறை உலகஉணவுஸ்தானபத்தினால் வழங்கப்பட்ட 17 ஆயிரம் மண்வெட்டிகள் ''அ'' அட்டை வைத்துள்ள விவசாயிகளுக்கு மட்டுமே வழங்கப்பட்டமை தெரிந்ததே.

(ஐ-158)

## பெயர் சூட்டும் வைபவம்

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக முன்னாள் இரசாயனத்துறைப் பேராசிரியர் மகேஸ்வரன் நினைவாக யாழ். பல்கலைக்கழக இராசாயனத்துறை மண்டபத்துக்கு ''மகேஸ்வரன் மண்டபம்'' என்று பெயர் சூட்டப்படவுள்ளது.

எதிர்வரும் 28 ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 9-00 மணியளவில் பல்கலைக் கழக துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளையால் பெயர் சூட்டு வைபவம் நடத்தப்படும்.

(இ-ரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக அதிகார சபையில் உள்ள
# 10 தமிழ் ஊழியர் மீது விசாரணை

கொழும்பு, மார்ச் 26
முஸ்லிம்களின் பெயருடன் துறைமுக அதிகார சபையில் பணியாற்றிய 10 தமிழர்கள் விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பாதுகாப்புப் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


அம்பாறை, கல்முனை மற்றும் மட்டக்களப்புப் பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் கொழும்பில் ஏதோ அசம்பாவிதத்தை ஏற்படுத்தக் காத்திருப்பதாக பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

துறைமுக அதிகார சபையில் பணியாற்றிய வேளையில் விடுதலைப் புலிகளுடன் இவர்கள் தொடர்புகளை வைத்திருந்தார்களா என்பது குறித்தும் அண்மைக்காலங்களில் கொழும்புத் துறைமுகத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் இடம்பெற்ற அசம்பாவிதங்களுக்கும் இவர்களுக்கும் தொடர்புண்டா என்பது குறித்தும் விசாரணைகள் மேற்கொள்ளப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது,

இந்தச் சந்தேக நபர்களில் பலர் ஆமர் வீதியில் உள்ள விடுதிகளில் தங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-10)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர் **சின்னவி அப்புக்குட்டி**

மலர்வு: **09 — 04 — 1924** உதிர்வு: **26 — 03 — 1993**

திதி: **26 — 03 — 1998**

கலங்கரை விளக்கே என்றும் நீ
எம் இதயங்களில் ஒளிர்வாய்!

உங்கள் நினைவோடு வாழும்:
குடும்பத்தினர்.

காளிகோயிலடி,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில்.

(54308)

## நூலக ஆலோசனைக் குழு

சுன்னாகம், மார்ச் 26
சுன்னாகம் பொது நூலகத்துக்கு நூலக ஆலோசனைக் குழுவொன்று ஏற்படுத்தப் பட்டுள்ளது.

பொது நூலகங்கள் நூலக ஆலோசனைக் குழுக்களை ஏற்படுத்த வேண்டுமென்ற உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் பணிப்புரையைத் தொடர்ந்து இந்தக்குழு ஏற்படுத்தப்பட்டது.

வலி. தெற்கு பிரதேச சபை விசேட ஆணையாளரைத் தலைவராகவும், நூலகரைச் செயலாளராகவும், மேலும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டதாகவும் இந்தக்குழு செயற்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-27)

## ஆலயத்தில் மீண்டும் பூசை

யாழ்ப்பாணம், மார்ச் 26
கடந்த சுமார் 8 ஆண்டுகளின் பின்னர் அளவெட்டி வடக்கு தவளகிரி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் பூசை வழிபாடுகள் எதிர்வரும் ஏப்ரல் முதலாம் திகதி முதல் ஆரம்பமாகவுள்ளன.

(ஐ)

## கிறிஸ்ரல் சென்ரர்

நெல்லியடி
98 O/L Day Class
ஆங்கில வகுப்பு
[பிரிவு II]
ஆரம்பம்:- 30-03-98
(திங்கள்)
மாலை 3. 00 மணி
(அனுமதியை முன் கூட்டியே பெற்றுக் கொள்ளுங்கள்.)
- நிர்வாகி

(54303)

## மருதனார்மடத்தில் மோ. சைக்கிள் திருட்டு

சண்டிலிப்பாய், மார்ச் 26
'மருதனார்மடம் சந்தைக்குச் சமீபமாக விடப்பட்டிருந்த சுமார் 55ஆயிரம் ரூபா பெறுமதிமிக்க சிகப்பு நிற "ஜமஹா" மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் காலை திருடப்பட்டுள்ளது.

சில்லாலையைச் சேர்ந்த ஒருவர் தாம் விளைவித்த மிளகாய், வெங்காயம் ஆகியவற்றை மருதனார்மடம் சந்தையில் விற்பனை செய்வதற்காக அந்த மோட்டார் சைக்கிளில் அவற்றை சந்தைக்கு எடுத்துவந்தார். சந்தைக்குச் சமீபமாக காங்கேசன்துறை வீதி ஓரத்தில் சைக்கிளை நிறுத்தி விட்டு சந்தைக்குள் சென்று பொருள்களை விற்பனை செய்து விட்டு சிறிது நேரத்தில் திரும்பி வந்து பார்த்த போது தமது மோட்டார் சைக்கிள் திருடப்பட்டது கண்டு அதிர்ச்சியடைந்தார்.

பல இடங்களிலும் மோட்டார் சைக்கிளைத் தேடி அலைந்த அவர் இறுதியில சுன்னாகம் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்தார்.

(ஐ-135)

## விவேகானந்தர் விழா

உடுவில் இந்து இளைஞர் மன்றத்தால் விவேகானந்தர் விழா மிகச் சிறப்பான முறையில் நடத்தப்பட்டது.

கடந்த ஞாயிறன்று பிற்பகல் 2- 30 மணி அளவில் மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் உடுவில் மான்ஸ் மகா வித்தியாலயத்தில் இவ்விழா நடைபெற்றது.

முன்னதாக இந்து இளைஞர் மன்ற அலுவலகத்திலிருந்து சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் ஊர்வலமாக எடுத்து வரப்பட்டது. ஊர்வலப் பாதையில் மக்கள் பூரண கும்பம் வைத்து வரவேற்றனர்.


## இதோ யாழ். நகரில்!

தொலைத் தொடர்பு வசதிகளுக்கு
நவீனசந்தை மேல்மாடியில் உள்ள லிங்கம் சில்க் ஹவுஸ் அருகில் உள்ள ஸ்தாபனத்தில் உள்நாட்டு வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளை பெற்றுக் கொள்ளலாம்.

**லிங்கம் சில்க் ஹவுஸ்** [அருகில்]
நவீன சந்தை மேல்மாடி,
யாழ்ப்பாணம்.

(54312)


## பொது அறிவித்தல்

### பருத்தித்துறை நகராட்சி மன்றம்

பழைய மரக்கறிச் சந்தைக்குத்
தெற்குப் புறமாகவுள்ள நிலத்தை
தற்காலிக பாவனைக்கு எடுத்தல்

பருத்தித்துறை பழைய மரக்கறிச்சந்தை அமைந்திருந்த இடத்திற்குத் தென் புறமாகவும், பிரதான வீதிக்கு மேற்குப் புறமாகவும், ஏறத்தாழ 6 பரப்பளவு கொண்ட நிலத்தைப் பருத்தித்துறை நகராட்சி மன்றம் மரக்கறிச் சந்தையொன்றைத் தற்காலிகமாக அமைப்பதற்குப் பயன்படுத்தத் தீர்மானித்துள்ளது. எனவே இவ்விடப்பரப்பில் காணித்துண்டு எதனையும் சொந்தமாகக் கொண்டவர்கள், அதற்குரிய ஆவணங்களுடன் இவ் விளம்பரத் திகதியிலிருந்து பதினான்கு நாள்களுக்குள் இந்நகராட்சி மனறத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.


வ விசயரட்ணம்
தலைவர்
நகராட்சி மன்றம், பருத்தித்துறை.

நகராட்சி மன்ற அலுவலகம்,
பருத்தித்துறை.
23-03-1998.

(சி/3204)

## நினைவஞ்சலி

இரண்டாம் ஆண்டு ஒன்பதாம் ஆண்டு





அமரர் **த. ஸ்ரீறங்கன்** திருமதி **ஸ்ரீ. சத்தியலீலா**

| | | | |
|---|---|---|---|
| பிறப்பு: | இறப்பு: | பிறப்பு: | இறப்பு: |
| 03 - 02 - 1949 | 05 - 04 - 1996 | 18 - 10 - 1951 | 18 - 04 - 1989 |

திதி: 26 — 03 — 1998

தங்கள் அரவணைப்பின்றி நித்தம் உங்கள் பிரிவை எண்ணித் துயருறும் பிள்ளைகள் மூவருடனும் நீக்கமற எங்களின் நெஞ்சங்களில் நிலைத்துவிட்ட நினைவலைகளுடன் உங்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

ஸ்ரீறமணன், ஸ்ரீசங்கர், ஸ்ரீறஜீவன் (பிள்ளைகள்)
மற்றும் குடும்ப உறவினர்கள்.

தகவல்: த. ரகு, திருமதி பூ. தம்பிஐயா,
நாவலடி,
கோப்பாய் தெற்கு, கோப்பாய்.

(54307)

## ஓராண்டு நினைவஞ்சலி

விஸ்வப் பிரம குல திலகம்
**இராமலிங்கம் சின்னப்பு**
(கந்தையா ஆச்சாரியார்)

தோற்றம்: **05 - 03 - 1916** மறைவு: **06 - 04 - 97**

பண்பின் சிகரமே
பாசத்தின் உறைவிடமே
அன்பின் திருவுருவே
ஆருயிர் ஐயாவே!

ஓராண்டென்ன நூறாண்டு ஆனாலும் தங்கள் அன்புத் திருவுருவம் அகலுமோ எம் அகத்தை விட்டு?

தங்கள் ஆத்ம சாந்திக்குப் பிரார்த்திக்கும்:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

அராலி தெற்கு,
வட்டுக்கோட்டை.

[54288]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஆள்கள்காணாமற் போனது குறித்து

# 150 அரச அதிகாரிகள் மீது வழக்கு

கொழும்பு, மார்ச் 26
ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் தென்பகுதியில் இடம்பெற்ற கலவரங்களின்போது ஆள்கள் காணாமற் போன சம்பவங்களுக்குப் பொறுப்பானவர்கள் எனக் கூறப்படும் 150 அரச அதிகாரிகளுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யும் பணி சட்டமா அதிபர் பணிமனையிடம் கையளிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கலவரகாலத்தில்காணாமற் போனவர்கள் பற்றிய விவரங்களைக் கண்டறிய மூன்று ஆணைக்குழுக்கள் நியமிக்கப்பட்டன எனவும் — அந்த ஆணைக்குழுக்களின் சிபார்சுகளுக்கு அமையவே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும்— ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

காணாமற் போன 32 ஆயிரத்து 300 பேர் தொடர்பான முறைப்பாடுகள் ஆணைக் குழுக்களுக்கு கிடைத்தனஎனவும்அவற்றில் சுமார்20 ஆயிரம் பேர்காணாமற் போன விதம் குறித்து கண்டறிய முடிந்தது எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

ஐ.தே.கட்சி அரசியல்வாதிகள் உட்பட 12,00 பேர், ஆள்கள் காணாமற் போன சம்பவங்களுக்குப் பொறுப்பாக இருந்தனர் என ஆணைக் குழுக்களின் அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆணைக்குழுக்களால் குற்றவாளிகள் எனக்காணப்பட்டவர்களுக்கு சட்டரீதியாகத் தண்டனை வழங்குவதற்கு விசேட அலகு ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது எனவும்—

ஆணைக் குழுக்களின் சிபார்சுகளுக்கு அமைய சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குத் தொடரும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும்— ஜனாதிபதி தெரிவித்தார்.

(இ–10)

# சண்டிலிப்பாயில் இன்று சிமெந்து விநியோகம்

வலி.தென்மேற்கு, மார்ச் 26
சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலர் பிரிவில் இன்று வியாழக்கிழமை முதல் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு இந்திய அரசின் இலவச சிமெந்து விநியோகம் நடைபெறவுள்ளது.

சண்டிலிப்பாயில் இருபத்தெட்டு கிராம அலுவலர் பிரிவுகளில் முதற்றடவையாக ஜெ–138, ஜெ–137, ஜெ–130, ஜெ–129, ஆகிய நான்கு பிரிவுளுக்கு சிமெந்து வழங்கப்படவுள்ளன.

இதேவேளை கிராம அலுவலரினால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளை இனங்காண்பதற்காகப் பிரதேச செயலர் பிரிவின் திட்டமிடல் உத்தியோகஸ்தர் எஸ்.குணரத்தினம் அவர்கள் நேரடியாகச்சென்று பார்வையிட்டு உறுதிப்படுத்திய பின்னரே சிமெந்து வழங்கப்படவுள்ளதாக செயலக செய்திக் குறிப்பொன்று தெரிவித்தது.

தெரிவு செய்யப்பட்டோர் உரப்பை ஒன்றுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ–185)

## ராஜகோபுரம் அமைப்பு

சுன்னாகம், மார்ச் 26
இணுவில் கந்தசுவாமி கோயிலுக்கு இராஜகோபுரம் அமைக்கும் பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

ஐந்து அடுக்குகள் கொண்டதாக, 65 அடி உயரமுடைய இந்த இராஜகோபுரம் அமைக்க 20 இலட்சம் ரூபா செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. முன்னர் 3 அடுக்குக் கொண்ட பழைமையான இராஜகோபுரம் அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(ஐ–27)

# மாகாண சபைக் கல்வி அதிகாரிகள் தன்னிச்சையாகச் செயற்படுகின்றனர்

## பிரதேச சபைத் தலைவர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், மார்ச் 26
மாகாணசபை இயங்காததால் கல்வித்துறை உத்தியோகத்தர்கள் தன்னிச்சையாக நடப்பது மனவருத்தத்திற்குரியது. இவர்கள் தகுதியானவர்களுக்கு நியமனம் வழங்கத் தவறிவிட்டனர்.

மல்லாகம் விசாலாட்சி வித்தியாலய மெய்வல்லுநர் போட்டியில் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வலி. வடக்கு பிரதேச சபைத் தலைவர் சு. ஸ்ரீபாஸ்கரன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை அதிபர் ந. மகேஸ்வரன் தலைமையில் அண்மையில் இவ் விளையாட்டுப்போட்டி நடைபெற்றது.

ஸ்ரீபாஸ்கரன் தனது உரையில் மேலும் கூறியதாவது:-
யாழ். குடாநாட்டிலே வன்செயலினால் பாதிப்புற்ற பகுதி வலி. வடக்குப்பிரதேசமாகும். ஆனால் இப் பிரதேசத்துக்கு ஆசிரிய தெரிவு வெட்டுப்புள்ளி 104 ஆகவும் வேறு சில இடங்களில் வெட்டுப்புள்ளி 80 ஆகவும் உள்ளது அநீதியானதாகும். வலி. வடக்கில் உள்ள ஆசிரியர்கள் திறமையான பெறுபேறுகளைப் பெற்றுள்ளனர். கொள்கை அடிப்படையில் ஆசிரியர்கள் தமது சொந்த ஊரில், அயலூரில் கடமையாற்ற வேண்டும். ஆனால் இங்கு நடப்பது வேறு. மல்லாகம் மகாவித்தியாலயத்தில் கடமையாற்றிய உள்ளூர் ஆசிரியர்கள் வேறு இடங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனர். சூழ்ச்சிச் செயல் என இதைக் கருத இடமுண்டு.

இரண்டு வருடங்களுக்கு மேல் தொண்டர் ஆசிரியராகவோ, பயிலுநர் ஆசிரியராகவோ கடமையாற்றிய ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க வேண்டும்— என்று அவர் தெரிவித்தார்.

தெல்லிப்பழைக் கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஆ. கமலநாதன் இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டார். திருமதி பாலாம்பிகை ஸ்ரீபாஸ்கரன் பரிசில்களை வழங்கினார்.

(ஐ–5-86)

# சட்டத்தரணிகளுக்கு முத்திரை வழங்க முயற்சி

யாழ். சட்டத்தரணிகளுக்குத் தேவையான முத்திரைகளைப்பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சட்டத்தரணிகளுக்குத் தேவையான 50 ரூபா, 100 ரூபா, 500 ரூபா, ஆயிரம் ரூபா முத்திரைகளுக்குயாழ்ப்பாணத்தில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதையடுத்து இம் முத்திரைகளைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு வடமாகாண பிரதி அஞ்சல் அதிபர் நாயகம் ஏ. கே. சிவஞானம் தலைமைக் காரியாலயத்துடன் தொடர்பு கொண்டு நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்.

முத்திரைகள் தேவையான சட்டத்தரணிகள் இது தொடர்பான விவரங்களை உள்ளடக்கி இரு பிரதிகளைத் தயாரித்து தாம் விரும்பும் தபாலதிபர்களிடம் கையளித்தால் அவர் அதனைப் பிரதேச அஞ்சல் அத்தியட்சகருக்கு அனுப்பி முத்திரைகள் பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்படும்.

சட்டத்தரணிகள் தாம் விரும்பும் தபாலகங்களில் இம் முத்திரைகளை விரைவில் பெற்றுக்கொள்ள முடியும் என்று தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ–5)

## சைவப்புலவர் பரீட்சை

யாழ்ப்பாணம், மார்ச் 26
அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கம் நடத்தும் இளஞ்சைவப் புலவர், சைவப் புலவர் பட்டப் பரீட்சைகள் அடுத்தமாதம் 24 ஆம், 25 ஆம், 26 ஆம் திகதிகளில் வண். நாவலர் மகாவித்தியாலயத்தில் நடைபெறும் என சைவப்புலவர் வ. கந்தசாமி அறிவித்துள்ளார்.

(ஐ–7)

# தமிழ் மொழித்திறன் போட்டி; விளக்கமில்லாத சுற்றறிக்கை

வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு 1998 ஆம் ஆண்டில் நடத்தவிருக்கும் தமிழ்மொழித்திறன் போட்டி சம்பந்தமான சுற்றறிக்கை (இல. 1997/26) விளக்கமன்றியும் தடுமாற்றத்தைத் தருவதாகவும் இருக்கிறது.

சுற்றறிக்கையில் விளக்கமில்லாத பகுதிகளை இங்கே சுட்டிக் காட்ட விரும்புகிறேன். சம்பந்தப்பட்டவர்கள் இவை குறித்து தக்க விளக்கமளிப்பார்கள் என நம்புகிறேன். எமது மாணவர்களின் நன்மை கருதி இது விடயத்தில் உரிய அதிகாரிகள் கவனம் செலுத்த வேண்டும்.

சுற்றறிக்கையின் 11 .0 ஆம் பந்தி
2 ஆம் 3 ஆம் பிரிவினர் குறிக்கப்பட்டுள்ள மும்மூன்று விடயப் பரப்புக்களுள்ளும் அடங்கியதாக நடுவர்களால் கொடுக்கப்படும் மும்மூன்று விடயத் தலைப்புக்களுள் ஒவ்வொன்றினை மாத்திரம் தெரிந்து பேசுதல் வேண்டும். நடுவர்கள் விடயப் பரப்புக்களையே தலைப்புகளாகக் குறித்துக் கொடுக்கக் கூடாது.

பந்தி 11. 2 இரண்டாம் பிரிவு: ஆண்டு 6, 7
பந்தி1:2: 1 — விடயப் பரப்புக்களும் விடயத்தலைப்புக்களும்:

1. ஜனநாயக உரிமைகள்: பேச்சுஉரிமை, எழுத்து உரிமை, வாழும் உரிமை,
2. இலக்கிய இலக்குகள்: அறம், பொருள், இன்பம்.
3. முப்பெரும் புலவர்கள்: வள்ளுவன், இளங்கோ, கம்பன்.

ஆண்டு 6, 7 – க்குரிய பிள்ளைகள் மேற்படி 11: 2: 1 இல் குறிப்பிட்டுள்ளவாறு —

1. ஜனநாயக உரிமைகள் என்ற விடயத்தில் பேசுவதாக இருந்தால், பேச்சுரிமையைப் பற்றி அல்லது எழுத்து உரிமை பற்றி அல்லது வாழும் உரிமை பற்றித் தனித் தனியாகப் பேசவேண்டுமா அல்லது மூன்றையும் ஒன்றாகச் சேர்த்து பேச வேண்டுமா? என்பது பற்றி விளக்கம் காணாமல் உள்ளது.

சில பாடசாலைகள் 11. 0 இல் குறிப்பிட்டவாறு மூன்றையும் ஒன்றாகச் சேர்த்துப் பேசப்பட வேண்டும் என்றும்—
சில பாடசாலைகள் 11 00 இல் குறிப்பிட்டவாறு மும்மூன்று விடயத் தலைப்புக்களுள் ஒவ்வொன்றினை மாத்திரம் தெரிந்து பேசுதல்வேண்டும்என்றும்அறிவித்துள்ளார்கள்.
இதே நிலை மற்ற விடயங்களுக்கும் பொருந்தும்.
விடயப் பரப்பு என்று கூறப்படுவது எது?
விடயத்தலைப்பு என்று கூறப்படுவது எது?
ஆண்டு 6, 7 க்குரிய பிள்ளை ஒன்று, ஒன்பது விடயத் தலைப்புக்களையும்,

## வாசகர் திருமுகம்

அதாவது, ஜனநாயக உரிமைகளின் கீழ்; பேச்சு/ எழுத்து/ வாழும் உரிமை பற்றியும், இலக்கிய இலக்குகளின் கீழ்; அறம்/ பொருள்/ இன்பம் பற்றியும், முப்பெரும் புலவர்களின் கீழ்; வள்ளுவன்/ இளங்கோ/ கம்பன் பற்றியும் ஒன்பது விடயங்களையும் பாடமாக்கி பேச வேண்டுமா?

அல்லது, தனித்தனி ஒரு விடயத்தை மட்டும் பேச வேண்டுமா? என்பது பற்றி விளக்கம் இல்லாதிருக்கின்றது.

பந்தி 11. 0 இல் நடுவர்கள் விடயப் பரப்புக்களையே தலைப்புக்களாகக் குறித்துக் கொடுக்கக்கூடாது எனவும் குறிக்கப்பட்டுள்ளது.

அப்படியாயின் இதன் விளக்கம் என்ன?

தயவு செய்து, இந்தக் குழப்பத்தை விரைவில் தீர்த்து வைத்து பிள்ளைகள் மேற்படி போட்டியில் குழப்பமில்லா நிலையில் தோன்றி வெற்றி வாய்ப்பைப் பெற்றுக் கொள்ள உதவுமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன்.

சென்றமுறையும் இதே போட்டியில் 'மனனம் செய்தல்' போட்டியில் சிலர் தாம் மனனம் செய்ததை இராகத்தோடு பாடினார்கள். சிலர் வசன நடையிலே இராகமின்றிச் சொன்னார்கள். இராகத்தோடு பாடியவர்கள் வெற்றி பெற்றுக் கொள்ளக் கூடியவாய்ப்பினால் மனனம் செய்த மற்ற மாணவர்கள் தோல்வியடைய வேண்டிய நிலை ஏற்பட்டது.

நடுவர்கள் சுற்றறிக்கை விளக்கங்களின்படி நடவாமல் ஒவ்வோர் இடத்திலும் ஒவ்வோர் நடைமுறையை நடுவர்கள் கையாள்வதால் பாதிக்கப்படுவது பிள்ளைகளே.

சம்பந்தப்பட்ட வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு இவை குறித்து உடன் விளக்கம் தருமா? அல்லது வழமைப்பிரகாரம் ஏனோ, தானோ என்று வாளாதிருக்குமா?

சங்கானை — எம். எஸ் கே.

# இறைவனின் கடனாளிகள் நாம்; வழிபாடுமூலம் மீளச் செலுத்தலாம்

## சஞ்சிகை வெளியீட்டு விழாவில் உரை

நெல்லியடி, மார்ச் 26
''இறைவனிடத்தில் கடனாளியாக இருக்கும் நாம், வழிபாட்டின் மூலமே கடனை திருப்பிச் செலுத்தவேண்டும். அதற்கு உள்ளமாகிய தாமரையை வளர்த்து உத்தமர்களாக வாழவேண்டும்.''

இவ்வாறு தொண்டமானாறு செல்வச் சந்நிதியான் ஆச்சிரம, கலை, பண்பாட்டுப் பேரவையினரின் ''ஞானச் சுடர்'' சஞ்சிகையின் மாசி மாத இதழ் வெளியீட்டு விழாவில், ஆசியுரை வழங்கிய நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பராமாச்சார்ய சுவாமிகள் குறிப்பிட்டார்.

சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப்பேரவைத் தலைவர் திரு.சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெற்ற சஞ்சிகை வெளியீட்டு விழாவில், நல்லை ஆதீன முதல்வர் மேலும் தொடர்ந்து கூறியதாவது;

மனித குலமாகிய நாம் சிந்தித்து செயற்பட்டு மற்றவர்களுக்கும் வழிகாட்ட வேண்டும். சுமையை இறக்க வந்த நாம் திருவருள் என்னும் சுமையை சுமந்து செல்ல வேண்டும்.

தற்பொழுது சமயம் சமுதாயத்தினால் பின்தள்ளப்பட்டு வருகின்றது. நாம் எமக்குரிய கட்டுப்பாடு, ஒழுக்க நெறி நின்று செயற்பட்டால் மட்டுமே முழு மனிதனாகக் கணிக்கப்படுவோம்.

சுதந்திரமான, கட்டுப்பாடான சமயம் இந்து சமயமாகும். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு தத்துவம் [illegible] தர்மத்தினால் வாழ்ந்த [illegible] செல்வச்சந்நிதி. எங்குபார்த்தாலும் இறைவனை வெட்டிவிட்டார்கள். இளைப்பாறு மண்டபங்கள் நிறைய இருந்த செல்வச் சந்நிதியில் சுமையை இறக்க மனிதர் தர்ம சிந்தனையுடன் வாழ்ந்த மண். இன்று ஆளில்லாத வீட்டில் ஓடு இல்லை. ஆதலினால் நாம் எழுத்திலாவது சமுதாயத்துக்கு விட்டுவிட்டுப் போகும் தேவை ஏற்பட்டுள்ளது.

விபூதி பூசும் இந்துக்கள் பசு மாட்டின் இறைச்சியை உண்கிறார்கள். முன்னைய காலத்தில் இப்படி ஒருவரும் வாழவில்லை. எனவே அருளோடு வாழப்பழகிய நாம் பொருளோடு வாழப்பழகக் கூடாது — என்று கூறினார்.

சஞ்சிகை குறித்த நூல் ஆய்வுரையை [illegible] தினார்.

(அ–109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

சின்னத்துரை சிவகடாட்சம் ஆகிய எனது விசேட அடையாள அட்டையும், செஞ்சிலுவைச் சங்க அங்கத்தவர் அட்டையும் கண்ணாபுரத்திற்கும், நல்லூருக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 51, முத்தமிழ் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் தயவுசெய்து ஒப்படைத்து உதவவும். [54297]

தங்கச்சங்கிலி ஒன்று திங்கட்கிழமை காலை 10 மணிக்குப் பின்னர் நாயன்மார்கட்டுச்சந்திக்கும், கல்வியங்காட்டுச் சந்திக்கும் இடையே ஆடியபாதம் வீதியில் தவறிவிட்டது. கண்டெடுத்தோர் ந. திலகவதி, இல. 70, செம்மணி வீதியில் ஒப்படைக்கவும். [54306]

### பேட்டுக்குஞ்சு

பிறிமா கைலைன் பிறவுண், பிறிமா கைலைன் வெள்ளை 1 மாதம் வளர்ச்சியடைந்த பேட்டுக்குஞ்சுகள் உடன் விற்பனைக்கு உண்டு. 'மல்லிகாபதி' சந்தை முன் ஒழுங்கை, மானிப்பாய். [54252]

### தெளிவாக பார்க்க

ரி. வி. நிகழ்ச்சிகளை தெளிவாகபார்ப்பதற்குபுதியஅன்ரனாக்களைப் பொருத்தவும், உங்கள் பழைய அன்ரனாக்களைத் திருத்திப் பொருத்துவதற்கும் பூஸ்ரர்களை பழுதுபார்ப்பதற்கும் நாடுங்கள்: வீனஸ் தனபாலசிங்கம் (B,Sc.) Ceylon Dip. In Electronic Engineering London. 284, ஸ்ரான்லி வீதி, (நாகவிகாரை முன்பாக) யாழ்ப்பாணம். [சி/3068]

## திருட்டு

இருபாலை, மார்ச் 26

ரூபா 16 ஆயிரம் பெறுமதியான புதிய நீரிறைக்கும் இயந்திரம் ஒன்று இருபாலைப் பகுதியில் ஊரடங்கு வேளையில் திருடப்பட்டுள்ளது.

இத் திருட்டு சம்பந்தமாக பொலீசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அண்மைக்காலமாக இருபாலைப் பகுதியில் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

(இ-ரி)

## மீனவர்களுக்கு கடன் வசதி

குருநகர், மார்ச் 26

யாழ். மாவட்டத்தில் மீன்பிடித் தொழிலை அபிவிருத்திசெய்யும் நோக்குடன் மீனவர்களுக்கு அபிவிருத்திக் கடன் வழங்கப்பட உள்ளதாக வடமாகாண ஸ்ரீலங்காசுதந்திரக்கட்சியின் அமைப்பாளர் வேல் முருகு தங்கராஜா தெரிவித்தார்.

இக்கடனை வழங்குவதற்காக யாழ்ப்பாணத்தில் விரைவில் கடற்றொழில் வங்கியொன்று திறந்து வைக்கப்பட உள்ளதாகவும்—

இவ்வங்கி மூலம் ஒவ்வொரு தேர்தல் தொகுதிக்கும் பணம் ஒதுக்கப்பட்டு மீனவர்களுக்கு கடனாக வழங்கப்பட உள்ளதாகவும். அவர் தெரிவித்தார்.

(இ ! . 5. !

---

## ஆழ்ந்த அனுதாபம்

வேலணை கிழக்கு மகாவித்தியாலய அதிபர்
**திரு. V. A. சிவராசா**
அவர்களின் அன்புப் பிதா

**திரு. வி. ஆறுமுகம்**

அவர்களின் பிரிவுத்துயரில் பங்கு கொள்ளும்;

வேலணை கிழக்கு
மகாவித்தியாலய - பாடசாலைச் சமூகம்.

(54301)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்ம சாந்திக் கிரியையும்

அமரர்

**சின்னத்தம்பி ஆறுமுகம்**

மலர்வு: **04—07—1913**
உதிர்வு: **24—02—1998**

24 - 02 - 98 இல் கொழும்பில் சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சின்னத்தம்பி ஆறுமுகம் அவர்களின் 31 ஆம் நாள் நினைவஞ்சலியும், ஆத்ம சாந்திக் கிரியையும் எமது இல்லத்தில் இன்று 26 – 03 – 98 (வியாழக்கிழமை) நடைபெறவுள்ளன. அவ்வமயம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் வருகை தந்து அவரது ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு மதிய போசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புரிமை தழுவி வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

6 ஆம் வட்டாரம்,
நயினாதீவு.

(54298)

---

## 31 ஆம் நாள நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்: **22 — 01 — 1924**



மறைவு: **24 — 02 — 1998**

**திருமதி பொன்னம்மா விசுவப்பிள்ளை**

அணையாத அன்பு என்னும் ஜோதி
நீ அம்மா! இடர் வந்த போது
சுமைதாங்க நீ அம்மா; அம்மா உங்களது
அன்பு முகத்தை மறக்க முடியாது அம்மா!

எமது தாயார் சுகவீனமுற்று இருந்த வேளை வந்து உதவியோருக்கும், அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்வதுடன் 28 – 03 - 98 சனிக்கிழமை நடைபெறும் அந்தியேட்டிக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி!

பிரிவால் துயருறும்:

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதரர், உறவினர்கள்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கு,
புன்னாலைக்கட்டுவன்.

(54268)

---

## சுன்னாகம் நூலகத்துக்கு நூல்கள் கொள்வனவு

சுன்னாகம் பொது நூலகத்துக்கு புதிதாக ரூபா 50ஆயிரம் பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. புத்தகங்களை வைப்பதற்காக கண்ணாடியுடன் கூடிய 3 அலுமாரிகளும் பெறப்பட்டுள்ளன.

வலி. தெற்குப் பிரதேச சபையின் பிரமாண அடிப்படையிலான ஒதுக்கீட்டின் கீழ் வழங்கப்பட்ட நிதியில் இருந்தே இவை கொள்வனவு செய்யப்பட்டன.

இராணுவ நடவடிக்கையைத் தொடர்ந்து இடப்பெயர்வின் பின்னர் நூலகத்தில் இருந்த 2 ஆயிரத்து 369 நூல்களும், பல தளபாடங்களும் காணாமற் போயிருந்தன.

(ஐ-27)

---

## தசாக - கிருகயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் ஈசுர வருஷம் பங்குனி மாதம் 4ஆம் திகதி (18 - 03 – 1998) புதன்கிழமை சிவபதமடைந்த எமது தந்தையார்

**சிவஸ்ரீ இரத்தினசபாபதிக் குருக்கள் கணேசக் குருக்கள்**

அவர்களின்

தசாகம்: பங்குனி மாதம் 13ஆம் திகதி (27-3-98) வெள்ளிக்கிழமை பகல் 10மணியளவில்.

கிருகயக்ஞம்: பங்குனி மாதம் 16ஆம் திகதி (30 - 3 - 98) திங்கட்கிழமை நண்பகல் 12 மணியளவில்.

ஷ நடைபெறவிருக்கும் கிரியைகளில் குடும்ப சகிதம் சமுகந்தருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

குறிப்பு: **30 - 03 - 98** திங்கட்கிழமை நடைபெறும் மதியபோசனத்தில் கலந்து கொள்ளுமாறு வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள்.

46, ராணி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

(54281)

---

## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து



செல்வன்

**ரவீந்திரன் கோபிகன்** (கோபி)

**26—03—1997**

நெல்லியடி — புன்னாலைக்கட்டுவன் தெற்கைப் பிறப்பிடங்களாகக் கொண்ட ரவீந்திரன் — செல்வநந்தினி தம்பதிகளின் செல்வப் புத்திரன் கோபிகன் தனது முதலாவது பிறந்தநாளை **26-03-98** இன்று கனடாவில் ஸ்காபுறோவில் உள்ள தனது இல்லத்தில் வெகுசிறப்பாகக் கொண்டாடுகிறார்.

இவரை கனடாவிலுள்ள அன்பு அப்பா, அம்மா, அண்ணா, அப்பப்பா, அப்பம்மா, புன்னாலைக்கட்டுவன் தாத்தா, அம்மம்மா, அன்ரி, அவுஸ்திரேலியா மாமா, மாமி, மச்சான்மார், மச்சாள், கனடா பெரியப்பா, பெரியம்மா, சுவிஸ் பெரியமாமா, மாமி, சுவீடன் சின்னமாமா, மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஆயாக்கடவை ஐங்கரனின் அருள் பெற்று பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் நீடூழி வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

க. சிறீஸ்கந்தராஜா [தாத்தா]

புன்னாலைக்கட்டுவன் தெற்கு.

(53878)

---


**கொழும்பு வரும் பயணிகளுக்கு ஒரு நற்செய்தி!**

சகல வசதிகளுடனும் தங்குவதற்கு நாடவேண்டிய ஸ்தாபனம்

**ஏ. கே. பி. லொட்ஜ்** ( சுலைமான் ஆஸ்பத்திரிக்கு முன்பாக )

என்பதை மிகவும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

T. P. NO:- 075330356
075330354

**A. K. B. LODGE,** 9, GRANDPASS ROAD, COLOMBO - 14

(54223)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## யாழ்ப்பாணத்தில் தமிழ்மொழி

யாழ்ப்பாணம் அரசாங்கத்தின் பிடிக்குள் வீழ்ந்து விட்டது என்று தென்னிலங்கைச் சிங்கள மக்களிடமும், வெளிநாடுகளிடமும் சொல்லிக் கொள்வதில் சந்திரிகா அரசு பெருமை கொண்டது. அதனால் ஒருவகை இன்பமும் கண்டது எனலாம். அது 1995 டிசம்பர் தொடக்கம் 1996 ஏப்ரல் வரையான காலம்.

குடாநாட்டில் அரசின் ஆணை வலுப் பெற்று சிவில் நிர்வாகம் சீராகி வருகிறது; மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பிக் கொண்டு இருக்கிறார்கள்; என்று சொல்லிக் கொள்வதில் இப்போது பெருமைப்படுகிறது; இன்பம் காண்கிறது அரசு.

அதற்கும் ஒருபடி மேலாக, குடா நாட்டில் புனர்நிர்மாண மற்றும் அபிவிருத்தி வேலைகளைச் செய்யப்போவதாகக் கூறி வெளிநாட்டுப் பிரதிநிதிகளை அழைத்து வந்து காண்பிக்கிறது.

இத்தனைக்கும் மத்தியில் இனப்பிரச்சினைக்கு ஊற்றுக் கண்ணாக விளங்கிய மொழி விவகாரம் நடைமுறையில்தீர்ந்தபாடில்லை

அரசமைப்புச் சட்டப் புத்தகத்தில் தமிழும் நாட்டின் உக்தியோக மொழி என்று இருப்பது ஏதோ உண்மை தான்.

ஆனால் குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களில் குற்றப் பத்திரிகைகளும், அறிக்கைகளும் சிங்களத்திலேயே தாக்கல் செய்யப்படுகின்றன. இதனால் பொதுமக்கள் தம்மீது சுமத்தப்பட்ட குற்றம் என்ன என்பதனைத் தெளிவாக அறியமுடிவதில்லை.

இதில் வேடிக்கை என்னவெனில், தமிழ் உத்தியோக மொழி அந்தஸ்துப் பெறுவதற்கு முன்னர் தேசியமொழி என்று கூறப்பட்ட வேளையில் யாழ்ப்பாண நீதிமன்றங்களில் குற்றப்பத்திரிகைகளும், அறிக்கைகளும் தமிழில் தாக்கல் செய்யப்பட்டன என்பதாகும்.

ஆனால் இப்போது சிங்களமொழியில் உள்ள நீதிமன்ற அறிக்கைகளை தமிழில் மொழிபெயர்ப்பதற்குத்தானும் வசதி செய்யப்படவில்லை.

இதுபோலவே, கொழும்பிலிருந்து யாழ்ப்பாண மக்களுக்கு வரும் அரச கடிதங்கள் சிங்களத்திலேயே உள்ளன!

தமிழ் உத்தியோகமொழி என்பதால் மாத்தறை மக்களுக்குரிய அரச கடிதங்களை தமிழில் அனுப்பினால் எப்படியிருக்கும்? அரசியல்வாதிகளையும் அதிகாரிகளையும் அங்குள்ளவர்கள்பிய்த்து விட மாட்டார்களா, என்ன!

தமிழும் உத்தியோக மொழி என்று அரசமைப்புச் சட்டத்தில் இருந்தென்ன? ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவுமா?

தமிழர் விவகாரங்களில் சிங்களத் தலைவர்களும் அரச அதிகாரிகளும் இதய சுத்தியுடன் செயற்பட்டால் இந்நிலை ஏற்படாது. தமிழர்கள் வெளியார், பகைவர்கள் என்று கருதும் இதயங்கள் தெற்கில்உள்ள வரை, தமிழர்கள் அடக்குமுறைக்கு உட்பட்டவர்களே! எண்ணம் சுத்தமாகும் வரை சட்ட எழுத்துக்கள் வெறும் கேலிக்குரியனவே!

# திட்டமிட்ட சந்தைப்படுத்தல் வசதி இல்லாததால் விவசாயிகளுக்கு கிலோவுக்குக் கிலோ நட்டம்!

## வாழை, வெங்காயம், உருளைக்கிழங்கு, முள்ளங்கி பயிரிட்டோர் பாதிப்பு

வலிகாமம் கிழக்குப் பிரதேசம் விவசாயத்திற்குப் பெயர் பெற்றது. பெரும்பான்மையான குடும்பங்கள் அதனை நம்பியே வாழ்க்கை நடத்துகின்றன. இன்றைய காலச் சூழலில் இவர்களின் நிலை கவலைக்குரியதாக உள்ளது.

உற்பத்திச் செலவு அதிகரித்துள்ளமை, சந்தை வாய்ப்புக்குறைந்தமை, உள்ளீடுகளுக்கான தட்டுப்பாடு ஆகிய காரணிகள் மிகுந்த தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன.

வாழை, வெங்காயம், உருளைக்கிழங்கு என்பன இப்பகுதியில் மேற்கொள்ளப்படும் முக்கியமான பயிர்ச் செய்கை. நீர்வேலி என்ற ஊர் ஒருகாலத்தில் வாழைக் குலைகளுக்குப் பெயர் பெற்றிருந்தது. தென்னிலங்கைக்கு இவை ஏற்றுமதி செய்யப்பட்டன. இதற்கு வசதியாக இங்கு வாழைக் குலைச் சங்கம் என்ற பெயரில் ஒரு கூட்டுறவு அமைப்பு கூட இயங்கியது. இன்றைக்கும் இங்கு உற்பத்தியாகும் வாழைக்குலைகள் அளவில் பெரியவையாக விளங்குகின்றன. ஏனைய இடங்களின் உற்பத்திகளுடன் ஒப்பிடும் போது தனிமுத்திரை பதித்து நிற்கின்றன.

நான்கு பரப்புக் கொண்ட ஒரு நிலத்தில் செய்கை பண்ணப்படும் வாழைப் பயிர்ச் செய்கையின் உற்பத்திச் செலவு ஆண்டொன்றுக்கு வருமாறு:

| | | செலவு (ரூபாவில்) |
|---|---|---|
| காணி பண்படுத்தல் | — | 1,000/- |
| கூட்டெரு | — | 1,500/- |
| எரிபொருள் | — | 3,500/- |
| இறைப்புக் கூலியாள் | — | 7,500/- |
| இயந்திர மதிப்பிழிவு | — | 1,500/- |
| இயந்திரப் பராமரிப்பு | — | 500/- |
| மொத்தச் செலவு | — | 15,500/- |

ஓர் ஆண்டில் அறுவடை செய்யப்படும் வாழைக்குலைகளின் எண்ணிக்கை சராசரியாக 180. இவற்றின் நிறை சராசரியாக 2,700 கிலோ ஆகும். இப்போது மொத்தமாக ஒரு கிலோ 5 ரூபாவுக்கு விற்பனை செய்ய முடிகிறது. ஆகவே மொத்த வருமானம் 2,700X5 = 13,500 ரூபாவாகும். இந்த வகையில் நோக்கும்போது 200 ரூபா நட்டம் ஏற்படுகிறது. விவசாயியின் உழைப்புக்கு ஊதியம் எதுவும் இல்லை.

இதேபோன்று வெங்காயப் பயிர்ச் செய்கையைக் கணக்கிட்டால் ஒரு போகத்திற்கு (4 பரப்பு) 28,000 ரூபாவுக்கு மேல் செலவாகிறது. அறுவடை செய்யப்படும் வெங்காயம் சராசரியாக 1.500 கிலோ தேறும். ஒரு கிலோவின் உற்பத்திச் செலவு 18 ரூபா 61 சதம் ஆகிறது. இன்று மொத்தமாக விற்பனை செய்யும் விவசாயிகளுக்கு கிலோவுக்கு 8 ரூபா வரையிலேயே விலையாகக் கிடைக்கிறது. 10ரூபா 61சதம் நட்டம் உண்டாகிறது,

உருளைக்கிழங்குப் பயிர்ச் செய்கையாளர்கள் சராசரியாக ஒரு பரப்பிற்கு 30,000 ரூபா முதலீடு செய்கின்றனர். அறுவடை செய்யும் போது 1,500 கிலோ தேறும். ஆகவே ஒரு கிலோவின் உற்பத்திச் செலவு 20 ரூபாவாகும். இன்று சந்தையில் விவசாயிகளுக்கு ஒரு கிலோவுக்கு 15 ரூபா முதல் 18 ரூபா வரை கிடைக்கிறது. இந்த வகையில் நோக்கும் போது ஒரு கிலோவுக்கு 2 ரூபா முதல் 5 ரூபா வரையில் நட்டம் ஏற்படுகிறது.

### மாற்றுப் பயிர்கள்

மாற்றுப் பயிர்ச் செய்கையாக கரட், பீற்றூட், முள்ளங்கி போன்றவைகளைப் பயிரிடுவோரின் கதியும் இது போன்றது தான். இதிலும் முள்ளங்கி பயிரிட்டோரின் நிலை மிகவும் பரிதாபமானது. முள்ளங்கியை இங்குள்ளவர்கள் விரும்பி உண்பதில்லை. தென் பகுதியில் தான் அதற்கு மதிப்பு அதிகம். பாதுகாப்புப் படையினர் தமது தேவைகளுக்கு மரக்கறிகளை விவசாயிகளிடமிருந்து தினமும் வாங்குகின்றனர். முள்ளங்கியையும் அவர்களை நம்பியே விவசாயிகள் பயிரிட்டுள்ளனர். ஆனால் அவர்களோ தாம் விரும்பும் போது தான் இதனைக் கொள்வனவு செய்கின்றனர். இதனால் இது விவசாயிகளிடம் தேங்குகிறது. சந்தையில் இதனை மதிப்பாக விற்க முடியவில்லை. மிகமிகக் குறைந்த விலையே கிடைக்கிறது.

விவசாயிகள் வேறு பல பிரச்சினைகளையும் எதிர் நோக்குகின்றனர். யாழ். குடாவில் கிடைக்கும் கூட்டெரு விவசாயத்திற்குப்பயன்படுத்தப் போதுமானதல்ல. முன்னைய காலங்களில் வன்னிப் பிரதேசத்திலிருந்து வாகனங்களில் யாட்டெரு கொண்டு வரப்பட்டது, தாராளமாக அது கிடைத்ததால் விவசாய நிலத்தைப் பண்படுத்தித் தயாராக்க வசதியாக இருந்தது. இப்போது அங்கிருந்து மாட்டெரு வருவதில்லை. உள்ளூரில் கிடைக்கும் கூட்டெரு வகைகளைக்கொண்டே சமாளிக்க வேண்டிய நிலை. இங்கே கிடைப்பது விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யப் போதுமானதல்ல.

பொருளாதாரத் தத்துவத்தின் படி தேவை அதிகரித்து அதன் நிரம்பல் குறையும் போது அப்பொருளின் விலை கூடும். இந்த அடிப்படையில் இங்கு கிடைக்கும் கூட்டெருவின் விலையும் அதிகம். இது உற்பத்திச்செலவை அதிகரிக்கிறது.

விவசாயக் கூலித்தொழிலாளர்களில் கணிசமான தொகையினர் வன்னிப் பிரதேசத்திற்குச் சென்று இன்னும் திரும்பவில்லை. இதனால் விவசாய நிலங்களில் வேலை செய்வதற்குக் கூலிகளைப் பிடிப்பது முயற்கொம்பாக உள்ளது. கூலியும் அதிகரித்துள்ளது.

### ஏற்றுமதி பாதிப்பு

தென்னிலங்கைக்கான ஏற்றுமதி பாதிக்கப்பட்டதனால் விவசாயிகள் தமது உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பை இழந்துள்ளனர். உற்பத்திப் பொருள்களை மதிப்பாகச் சந்தைப்படுத்த முடிவதில்லை. நிரம்பலிலும் பார்க்கத் தேவை குறையும் போது பொருள்களின் விலை வீழ்ச்சியடைவது இயல்பே இதனால் விவசாய உற்பத்திப்பொருள்களின் விலைகளில் மிகுந்தசரிவு காணப்படுகிறது.

இந்தக் கஷ்டங்களில் இருந்து விவசாயிகள் விடுபட வேண்டுமானால் சில நடவடிக்கைகள் அவசரமாகவும் அவசியமாகவும் எடுக்கப்பட வேண்டும்.

உரும்பிராய் செய்தியாளர்

1 விவசாய விளை பொருள்களுக்கு ஏற்றுமதி வாய்ப்பு உருவாக்கப்பட வேண்டும்.

2 பொருள்கள் சந்தைகளில் அபரிமிதமாகக் குவிவதைத் கட்டுப்படுத்த வேண்டும். (இதன் மூலம் நிரம்பல் குறைய விலை அதிகரிக்கும்)

3 விளை பொருள்களைச் சேகரித்து வைக்க ஏற்பாடு செய்வதன் மூலம் சந்தைக்குப் பொருள்கள் அளவாகச் செல்ல வழிவகுக்க வேண்டும்.

4 உற்பத்திப் பொருள்கள் பழுதடையாது பாதுகாக்கவும், பதப்படுத்தவும் ஏற்பாடு செய்யப்படவேண்டும்.

இது விடயத்தில் சம்பந்தப்பட்ட சகல தரப்பு அதிகாரிகளும் இணைந்து செயற்படுவார்களா? ★

# செய்தி மடல்

## செயலமர்வு

அச்சுவேலி, மார்ச் 26

ஆசிரியர் தொடர் கல்விச் செயல் அமர்வுகள் யாழ். இந்துக் கல்லூரியில் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். (ஐ-11)

## சேவைநலன் பாராட்டுவிழா

யாழ். கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் கடந்த 12 வருடங்களாக ஆரம்பப்பிரிவு அதிபராகப் பணி ஆற்றிய திருமதி பி. கு. பெனடிற்றின் சேவை நலன் பாராட்டு விழா இன்று வியாழக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் வித்தியாலய பிரதான மண்டபத்தில் அதிபர் திரு. ஆ. சி. சோதிலிங்கம் தலைமையில் நடைபெறும். (ஐ-30)

## சாயி சிந்தனை

நீங்கள் செல்வத்தைத் திரட்டி வைத்திருக்கலாம்; ஆழ்ந்த கல்வியறிவைப் பெற்றுக் கொண்டிருக்கலாம்; ஆரோக்கியமும், வல்லமையும் படைத்தவராகவும் இருக்கலாம்; ஆனால் இவற்றோடு கூடவே, சர்வ வல்லமை வாய்ந்த பரம்பொருளைப் பற்றிய விளக்கமும் பெற்று, அதனால் கிட்டும் ஆனந்தத்தை நாடும் ஆவலும் பெற்றிருக்கவில்லையென்றால், உங்களால் சேகரிக்கப்பட்ட அனைத்தும் உபயோகமில்லாத வெறும் தட்டுமுட்டு ஆகிவிடும்.

இந்திய நாட்டுக்குரிய பெரும் இதிகாசம், மகாபாரதம் கௌரவர்களுக்கும் பாண்டவர்களுக்கும் நடந்த போரை அது விவரிக்கின்றது. பொருள் வளமும், படை பலமும் மிக்கவர்களான கௌரவர்கள் கிருஷ்ண பரமாத்மாவை அணுகி உதவி கோரினார்கள். பெரும் படையையும், பெருமளவு போர்த் தளபாடங்களையும் வேண்டிப் பெற்றதோடு அவர்கள் திருப்தியடைந்தார்கள்.

பாண்டவர்கள் கண்ணபிரானிடம் வேண்டியது அவருடைய கிருபையை மட்டுமே. பகவான் அதற்கிசைந்து நிராயுதபாணியாக, தானே தனியாக உதவிக்கு வந்தார். கண்ணனின் கையில் சாட்டை ஒன்று இருந்தது. அதனால் அர்ச்சுனனுடைய தேர்க்குதிரைகளை ஓட்டினார் அவ்வளவுதான்!

ஆனால் வெற்றிக்கு வேண்டியதாய் உள்ளதும் அவ்வளவே! கௌரவர்கள் பூண்டோடு ஒழிக்கப்பட்டார்கள். பாண்டவர்கள் இராச்சியத்தைக் கைப்பற்றினார்கள்; [illegible] டார்கள்.

[ஆதாரம்: Vorice of Avatar]

## உதய வாக்கு

வாழ்வைப் பாதுகாக்கும் ஆயுதம் அறிவு. அகத்தை வளர்ப்பதற்கான கருவியும் அது தான்.

- அஸ்லாமா இக்பால்

## நாளை

பங்குனி 13

வெள்ளிக்கிழமை

திதி: சதுர்த்தசி

பிற்பகல்: 1. 43 வரை.

நட்சத்திரம்: பூரட்டாதி

பிற்பகல்: 4. 15 வரை.

அமாவாசை விரதம்

சுபநேரம்: 6.14-7.44

ராகு காலம்: 10.44- 12.14

(இரவுக்கும் பகலுக்கும் பழைய நேரப்படி)

## யாழ். வண்ணை. வைத்தீஸ்வரன் மகோற்சவ சிறப்பம்சம்

### வண்ணையிலே அருள் சுரப்பவனே!

வண்ணைநகர் தன்னை உயர்தலமாய்க் கொண்டு
வளம்யாவும் பெருகிடவே அருள் சுரந்து
திண்மையொடு தவம் புரிவோர்க்கு இரங்கி மேலாம்
தூய உரு காணவந்து வரங்கள் ஈந்து
நண்ணிடுவோர் பவப்பிணியை நாளும் நீக்கி
நல்வாழ்வு பெற்றிடவே கிருபை கூர்ந்து
பண்ணின் மொழித்தையலொடு இலங்குகின்ற
பரமனது திருப்பாதம் போற்றி போற்றி.

- ஏ. கே. ஏரம்பமூர்த்தி

(இன்று வியாழக்கிழமை — நான்காம் திருவிழா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 ஆயிரம் வெற்றிடங்கள் வட.-கி.மாகாணசபையில்!

திருகோணமலை, மார்ச்26

வடக்குக்கிழக்கு மாகாண சபைக்குட்பட்ட பிரதேசத்தில் அங்கீகரிக்கப்பட்ட 16 ஆயிரத்து 58 தொழில் வெற்றிடங்கள் காணப்படுகின்றன.

இம் மாகாண சபைக்குட்பட்ட அரச திணைக்களங்களில் நிலவும் கல்வித்துறை வெற்றிடங்களில் பெரும் எண்ணிக்கையானவை ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களாகும். சுகாதாரத்துறையில் 4 ஆயிரத்து 559 வெற்றிடங்கள் காணப்படுகின்றன. இவற்றில் வைத்திய அதிகாரிகளுக்கும் தாதி உத்தியோகத்தர்களுக்குமான வெற்றிடங்களே அதிகம்.

வேலையாற்றுவதற்கு மொத்தம் 48 ஆயிரத்து 959 ஆளணியினர் தேவை. ஆயினும் தற்போது அரச திணைக்களங்களில் மொத்தம் 32 ஆயிரத்து 901 பேரே வேலை செய்கின்றனர்.

திணைக்களங்களில்காணப்படும் தொழில்வெற்றிடங்களில் அதிகளவானவை கல்வித் துறையிலும், சுகாதாரத்துறையிலுமே காணப்படுகின்றன.

இவ்வாறே மற்றைய திணைக்களங்களிலும் சராசரியாக 25 வீதத்திற்கு மேற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படாமலேயே உள்ளன.

(ஐ-ரீ)

## பண்டத்தரிப்பு சந்தை இயங்காததால் பாதிப்பு

சண்டிலிப்பாய், மார்ச் 26

பண்டத்தரிப்பு மத்திய சந்தைக்கட்டடம் இதுவரை புனரமைக்கப்படாதிருப்பதால் இப் பகுதியிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், பிரான்பற்று ஆகிய இடங்களைச் சேர்ந்த விவசாயிகள் தாங்கள் சஷ்டப்பட்டு உற்பத்தி செய்த மரக்கறி வகைகளையும் மிளகாய், சின்னவெங்காயம் ஆகியவற்றையும் விற்பனை செய்ய முடியாது திண்டாடுகின்றனர்.

சங்கானை, மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய தொலைவிடங்களிலுள்ள சந்தைகளுக்கு இவர்கள் தங்கள் விளை பொருள்களைக் கொண்டு சென்று விற்க வேண்டி உள்ளது.

பாவனையாளர்களும் தமக்குத் தேவையான பொருள்களை வாங்குவதற்கு இச் சந்தை இயங்காத நிலையில் இருப்பதால் சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

கடந்த யுத்த காலஅனர்த்தங்களின் போது இச்சந்தையின் கூரை சீற்றுகளும் கூரை மரங்களும் திருட்டுப் போய் விட்டன. தறபோது வெறும் தூண்களே அங்கு காணப்படுகின்றன. சந்தைக் கட்டடத்தின் முழுப் பகுதியையும் இப்போது புனரமைக்க முடியாது விட்டாலும் தற்காலிகமாக ஒரு பகுதிக்கு கூரைகளைப் போட்டு சந்தையை இயங்க வைக்கலாம் என்று இப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை பண்டத்தரிப்பு கிராம அபிவிருத்திச் சங்கம் இச் சந்தையை விரைவில் புனரமைத்து இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு வலி, தென்மேற்கு பிரதேச சபை நிர்வாகத்திடமும் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்திடமும் கடிதமூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

(ஐ-135)

## விலை உயர்வு

யாழ். குடாநாட்டில் தேங்காயின் விலை நாளுக்குநாள் அதிகரித்துச் செல்கிறது.

கடந்த இருமாதங்களுக்கு முன் விற்றவிலையை விட தற்போது நான்குமடங்காக தேங்காயின் விலை உயர்ந்துள்ளது.

ஒரு தேங்காய் 12 ரூபாவில் இருந்து 18 ரூபாவரை விற்பனையா வருகிகிறது.

(ஐ-15)

# மேல்மாகாணசபை முதல்வர் பதவிக்கு ஐ.தே.க வேட்பாளர் கரு ஜெயசூரிய?

சொழும்பு, மார்ச் 26

மேல் மாகாண சபைக்கான ஐ. தே. கட்சியின் முதல் அமைச்சர் பதவிக்கான வேட்பாளராக கொழும்பு நகர மேயர் கரு ஜெயசூரியாவை நிறுத்துவது என ஐ. தே. க. தீர்மானித்துள்ளது.

இது தொடர்பான உத்தியோக பூர்வ அறிவிப்புஇன்று அல்லது நாளை வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுவதாக 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

மேல்மாகாண சபையின் முதல்வர் பதவிக்கான வேட்பாளராக அனுரா பண்டாரநாயக்காவை நியமிக்குமாறு சம்பஹா மாவட்ட ஐ.தே.க நிர்வாகக் குழு ஏகமனதாகத் தீர்மானம் நிறைவேற்றி இருந்தது. இருப்பினும் மேல்மாகாண முதல்வர் பதவிக்கான வேட்பாளராக அனுராவின் பெயர் கவனத்தில் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகிறது. மேல்காகாண சபையின் நிர்வாகத்தின் கீழ் கொழும்பு, கம்மஹா மற்றும் களுத்துறை ஆகிய மாவட்டங்கள்வருகின்றன.

(ஐ-10)

## தவக்கால சிந்தனை

(30 ஆம் நாள்)

இறைவாக்கு உரைத்த எரேமியாசைத் தாக்க மக்கள் முற்படுகின்றார்கள். எதிர்க்கவந்தவர்களுக்காகவே அவர் இறைவனை வேண்டுகிறார்: ''நான் அவர்களுக்கு நன்மையைக் கோரிடவும் உம் கோபத்தை அவர்களிடமிருந்து தடுத்து நீக்கவும் உம் முன்னிலையில் வந்து நின்றதை நினைத்தருளும்'' என்று உருக்கமாக இறைவனின் உதவியை நாடி நிற்கின்றார்.

உண்மை கசப்பது தான்; உண்மை கூறுபவன் எதிர்ப்பையும் ஏளனத்தையும் சந்திக்க நேரிடும், நாம் தீமைசெய்யவில்லை என்று சொன்னால் மட்டும் போதாது, நாம் தொடர்ந்து நன்மை செய்து கொண்டே இருக்க வேண்டும். ஏனெனில் நாம் நன்மை செய்யவில்லை என்றால் அது ஒரு தீமை நிலையின் வெளிப்பாடேயாகும்.

கிறிஸ்துவின்பணிவாழ்வு நமக்கு மாதிரிகையாய் அமைவதாக. ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்பது நமது குறிக்கோளாக அமையட்டும். 'எவ்வுயிரும் என்னுயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட் சருணை செய்வாய் பராபரமே'',

அருட் திரு.

பி.ஜே.யோகா அ.ம.தி.

## ஆரம்பக் கல்வி கற்பித்தற் கண்காட்சி

வலிகாமம் தெற்கு, மார்ச் 26

ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்கள் பயனடையக் கூடியதான ஆரம்பக் கல்வி கற்பித்தல் கண்காட்சி எதிர் வரும் சனிக்கிழமை காலை சங்கானை கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த வட்டு. திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் நடைபெறும்.

சங்கானைக் கல்விக் கோட்டத்தைச் சேர்ந்த பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களுடன் இணைந்து இக் கோட்டத்தைச் சேர்ந்த ஆரம்பக் கல்வி ஆசிரிய ஆலோசகரினால் இக்கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

ஆண்டு ரீதியாக பாட அலகுகளுக்குப் பொருத்தமான கட்புல, செவிப்புல சாதனங்கள் இக்கண்காட்சியில் வைக்கப்பட உள்ளன.

பாடசாலை மட்டத்தில் நடத்தப்பட்ட கண்காட்சிகளில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பொருள்கள் கோட்டமட்ட கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்படும்.

கடந்த வருடமும் இத்தகாலப் பகுதியில் இது போன்ற கண்காட்சி பண்ணாகம் மெய்கண்டான் வித்தியாலயத்தில் நடத்தப்பட்டது குறிப்பிடத்தக்கது.

(ஐ-152)

## வீதி ஒழுங்கு பற்றிய கைந்நூல்

யாழ். மோட்டார்போக்குவரத்துத் திணைக்களத்தில் சாரதி அனுமதிப் பத்திரம் பெறுவதற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தவர்கள் மேற்படி அலுவலகத்தில் வீதி ஒழுங்கு சம்பந்தமான கைந்நூல் ஒன்றைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்காக நடத்தப்படவிருக்கும் எழுத்துப் பரீட்சை இக் கை நூலை அடிப்படையாகக் கொண்டதாகவே அமையும் என்றும்— எழுத்துப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களே செய்முறைப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

வீதி ஒழுங்கு சம்பந்தமான கைந்நூலை ரூபா 25 செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம் என யாழ். மோட்டார் போக்குவரத்துத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன

# செய்திக் கொத்து

### இயந்திரப் படகு பழுதடைவதால் மக்கள் பாதிப்பு

திருகோணமலை, மார்ச் 26

திருகோணமலை சீனன்குடா, கிண்ணியா துறையில் சேவையில் ஈடுபடுத்தப்படும் இயந்திரப்படகு அடிக்கடி பழுதடைகின்றது.

இதனால் இத்துறையினூடாகப் பயணம் செய்யும் மக்கள் பெரும் சிரமங்களை எதிர் நோக்குகின்றார்கள்.

இப் படகு மூலமாகவே வாகனங்களும் கொண்டு செல்லப்படுகின்றன.

படகில் பொருத்தப்பட்டுள்ள மோட்டார் இயந்திரம் பழுதடைவதாலேயே படகுச்சேவை நிறுத்தப்படுகின்றது என்று தெரிவிக்கப்படுகின்றது.

(இ-ரீ)

### நெடுந்தீவில் தமிழ்த்தினப் போட்டிகள்

நெடுந்தீவு கோட்டப்பாடசாலைகளுக்கிடையிலான தமிழ்த்தினப் போட்டிகள் இன்று வியாழக்கிழமையும், 30 ஆம் திகதி திங்கட்கிழமையும் நடைபெறும்.

எழுத்துப் போட்டிகள் இன்று வியாழக்கிழமையும் பேச்சு, நாடகம், வில்லுப் பாட்டுப் போட்டிகள் திங்கட்கிழமையும் நடைபெறும் என பாட இணைப்பாளர் அ. வெ. அரியநாயகம் தெரிவித்தார்.

(இ-111)

### தபாற் பொதிகள் சோதனை

யாழ்ப்பாணம், மார்ச் 26

யாழ்ப்பாணத்தில் இருந்து நெடுந்தீவுக்கு நாளாந்தம் அனுப்பப்படும் தபாற்பொதிகள் குறிகாட்டுவான் துறைமுகத்தில் கடற்படையினரின் சோதனைக்குப் பின்னரே அங்கு போய்ச் சேர்கின்றன.

(ஐ)

### ஊழியருக்கு ஏற்புத்தடை ஊசி

தென்மராட்சி, மார்ச்26

உரும்பிராயில் இயங்கும் காங்கேசன்துறை சிமெந்து கூட்டுத்தாபன தொழிற்கூடத்தில் வேலை செய்யும் 75 -க்கு மேற்பட்ட ஊழியர்களுக்கு கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை உத்தியோகத்தர்களால் ஏற்புத்தடை ஊசிமருந்து அண்மையில் ஏற்றப்பட்டது.

(ஐ - 117)

### வெப்பநோய்கள் பரவுகின்றன

அச்சுவேலி, மார்ச் 26

யாழ். குடாநாட்டில் கடும் வரட்சி நிலவுவதால் சின்னமுத்து, கூவைக்கட்டு, பொக்களிப்பான் போன்றதொற்று நோய்கள் பரவிவருகின்றன.

வெப்பமான காலநிலையில் பரவி வரும் இந்த நோய்களின் தாக்கம் இந்த வருடம் அதிகமாக இருப்பதாகவும் கிராமப் புறங்களில் இவை தீவிரமாகப் பரவி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

(ஐ-11)

### ஆசிரியர் நியமனம்

சண்டிலிப்பாய், மார்ச் 26

பிரான்பற்று கலைமகள்வித்தியாலயத்தில் நிலவிய ஆசிரியர் பற்றாக் குறையை நிவர்த்தி செய்யுமுகமாக அண்மையில் புதிதாக நான்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தற்போது இங்கு விஞ்ஞான ஆசிரியர் பதவி மட்டுமே வெற்றிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-135)

### விளையாட்டு மைதானம் திறப்பு

நெல்லியடி, மார்ச் 26

புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் புதிய விளையாட்டு மைதானத் திறப்பு விழாவும், இல்லமெய்வல்லுநர் போட்டிகளும் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு அதிபர் ஆ. மகேசு தலைமையில் நடைபெறவுள்ளன.

பருத்தித்துறை பங்குத்தந்தை அருட்திரு. பி. எம். இம்மானுவேல் அடிகளாரினால் புதிய விளையாட்டு மைதானம் திறந்து வைக்கப்படும்.

இவ் வைபவங்களில் சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி, பருத்தித்துறை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் வி-ரீ. செல்வரட்ணம், பருத்தித்துறை பனை தென்னைவள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் வீ. ஸ்ரீராமச்சந்திரா, முன்னாள் அதிபர் எஸ். கணேசமூர்த்தி ஆகியோர் கலந்து கொள்வர்.

(ஐ-109)

### நெல்லுக்கு கிராக்கி

வலி. தென்மேற்கு, மார்ச் 26

நவாலி நங்கன்குளம் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்ட ''500 - 1'' இன மொட்டைக்கறுப்பன் நெல்லுக்கு பெரும் கிராக்கி ஏற்பட்டுள்ளது.

எழுபது கிலோ நிறையுள்ள நெற்சாக்குகள் ஆயிரத்து 250 ரூபா முதல் ஆயிரத்து 300 ரூபா வரை யாழ் நகர் வர்த்தகர்களால்கொள்வனவு செய்யப்பட்டு வருகிறது.

இதேவேளை ''எச் — 4' இன நெல் ஆயிரத்து 100 ரூபாவுக்குக் குறைவாகவே விவசாயிகளால் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

(ஐ-185)

### வயதெல்லை அதிகரிப்பு

வலி-தென்மேற்கு, மார்ச் 26

வடக்கு—கிழக்கு மாகாண பொதுச்சேவை ஆணைக்குழு பட்டதாரி கலை, வர்த்தக, விஞ்ஞான ஆசிரியர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான வயதெல்லையை 40இல் இருந்து 45ஆக உயர்த்தியுள்ளது.

நாற்பது வயது என முன்னர் குறிப்பிடப்பட்டதனால் வெளிவாரி பட்டதாரி மாணவர்கள் பலர் பாதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையினால் பாதிக்கப்பட்டிருந்த பட்டதாரிகள் தற்போது விண்ணப்பங்களை அனுப்பி வருகின்றனர்.

(ஐ-185)

### மேலதிக பஸ் சேவை

நெடுந்தீவு, மார்ச் 26

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில்இருந்து குறிகாட்டுவான் துறைமுகத்திற்கு மேலதிக பஸ்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தில் இருந்து காலை 10 மணிக்கு இச் சேவை நடைபெறும்.

(ஐ-111)

### நற்செய்திக் கூட்டம்

இளவாலை, மார்ச் 26

இளவாலைப் பகுதியில் சென். யூட் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4-00மணி முதல் 6-00 மணிவரை அப்போஸ்தலர் சபையால் ஒழுங்கு செய்யப்பட்ட நற்செய்திக்கூட்டம் நடைபெற்றது. கொழும்பிலிருந்து பாஸ்ரர் பசிலிஸ், பாஸ்ரர் லூயிதாசன் ஆகியோர் அதில் கலந்து கொண்டனர்.

(ஐ-ரீ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் வெளியீடு

கொழும்புத்துறை, மார்ச் 26

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீசெல்வச் சந்நிதி முருகன் ஆலயச் சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ''ஞானச்சுடர்'' மாத நூல் வெளியீடு பேரவையின் தலைவர் சு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் நடைபெறும்

இந்நிகழ்விற்கான வெளியீட்டுரையை பேரவையின் போஷகர் சிவஸ்ரீ சோ. தண்டபாணிகதேசிகர் நிகழ்த்துவார்.

நூல் ஆய்வுரையை ஹாட்லிக் கல்லூரி ஆசிரியர் ஆ. சிவநாதன் வழங்குவார்.

(ஐ-30-173)

# பிணையில் விடுவிக்கப்பட்ட பெண் மீண்டும் கைது செய்யப்பட்டார்

## அநுராதபுரம் கொண்டு செல்ல ஏற்பாடு

யாழ்ப்பாணம், மார்ச் 26

வரைபடம் வைத்திருந்ததாகக் குற்றஞ்சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தால் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டிருந்த வயோதிபப் பெண் மீண்டும் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

நாவற்குழியைச் சேர்ந்த செல்லையா தவமணி (வயது 60) என்ற பெண் கொழும்பிலிருந்து வந்த பொழுது வரைபடம் பொறிக்கப்பட்ட 'பாக்' வைத்திருந்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டார்.

இவரை அநுராதபுரம் கொண்டு செல்ல மல்லாகம் நீதிபதி பணிப்புரை விடுத்த போது நீதிமன்றில் மயங்கி வீழ்ந்தார்.

பின்னர் இவர் யாழ். போதனா வைத்திய சாலையில் சில நாள்கள் அனுமதிக்கப்பட்டிருந்தார்.

மீண்டும் அவர் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிவான் மு. திருநாவுக்கரசு அவர் பயணம் செய்ய முடியாத நிலையில் இருந்ததால் மனிதாபிமான அடிப்படையில் பிணையில் செல்ல அனுமதித்திருந்தார்.

காங்கேசன்துறைப் பொலீஸார் இந்த வழக்குத் தொடர்பாக நேற்று முன்தினம் மனு ஒன்றை நீதி மன்றம் ஒன்றில் சமர்ப்பித்திருந்தனர்.

இந்த மனுவில் குறிப்பிட்ட வயோதிபப் பெண் பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருந்தார் என்றும் —

அவசர காலச்சட்ட விதிகளின் படி இவரது வழக்கு அநுராதபுரம் நீதிமன்றிலேயே விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட வேண்டும் என்றும் — மல்லாகம் நீதிமன்று இவரை விடுதலை செய்ய முடியாது எனவும் — அதில் குறிப்பிட்டிருந்தது.

இதனையடுத்து சம்பந்தப்பட்ட பெண்ணை அநுராதபுரம் நீதிமன்றில் ஆஜர் செய்ய நடவடிக்கைகளை எடுக்குமாறு மல்லாகம் நீதிவான் உத்தரவிட்டதைத் தொடர்ந்து நேற்று இப்பெண் மல்லாகம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டார்.

இவரை விமானம் மூலம் அநுராதபுரம் அழைத்துச் செல்ல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

(இ-5-9)

## யாழ். மாணவர்கள் தெற்கில் சுற்றுலா

அச்சுவேலி, மார்ச் 26

யாழ். மாவட்ட மாணவர்கள் தென்பகுதிக்கு சிநேகபூர்வ சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

இதற்கென 16 வயதிற்கும் 23 வயதிற்கும் இடைப்பட்ட மாணவர்கள் பாடசாலை ரீதியாகத் தெரிவு செய்யப்பட்டு வருகின்றனர்.

பெற்றோரின் சம்மதக் கடிதத்துடன் பாடசாலை அதிபர்கள் ஊடாக சுற்றுலாக் குழுவிற்கான மாணவர்கள் தெரிவு செய்யப்படுகின்றனர்.

(ஐ-11)

## சமய நிகழ்வுகளில்

யாழ்ப்பாணம், மார்ச் 26

மாவை கொல்லங்கலட்டி அருள்மிகு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் தேவஸ்தான மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் முதலாம் திகதி புதன்கிழமை காலை 9-12 இற்கும் 10-12 இற்கும் இடையில் இடம் பெறவுள்ளது. இதனையிட்டு பூர்வாங்க கிரியைகள் எதிர்வரும் சனிக்கிழமை முதல் ஆரம்பமாகவுள்ளன.


**METHODIST CHURCH VOCATIONAL TRAINING CENTRE**

**மெதடிஸ்த திருச்சபை**
**தொழில் பயிற்சி நிலையம்**

161, 163, 165 பிரதான வீதி, யாழ்ப்பாணம்.

இலவச பயிற்சிகள் ஆரம்பம்
01-04-1998 காலை 10.00 மணி.

1. ஆங்கில தட்டெழுத்து வகுப்புகள்.
   (G.C.E: O/L பரீட்சையில் ஆங்கிலத்தில் விசேட சித்தி)
2. தமிழ் தட்டெழுத்து வகுப்புகள்.
   (G.C.E. O/L பரீட்சையில் தமிழில் விசேட சித்தி)
3. BOOK KEEPING CLASSES.

மேற்கூறிய பயிற்சிகளில் சேர விரும்புவோர் இந்த நிலையத்தில் 01-04-1998 காலை 10.00 மணிக்கு தவறாது சமுகம் கொடுக்கவும்.

முகாமைக் குரு,
மெதடிஸ்த திருச்சபை,
யாழ். சேகரம்.

(54314)


## டாக்டர்கள் வேலை நிறுத்தம்

கொழும்பு, மார்ச். 26

அரசாங்க வைத்தியசாலைகளில் பணியாற்றும் டாக்டர்கள் இன்று ஒருநாள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட உள்ளனர்.

அண்மையில் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் பதவி ஒன்றுக்கு தகுதி புறக்கணிக்கப்பட்டு அரசியல் செல்வாக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதாக அரச வைத்தியர்கள் சங்கம் குற்றம் சுமத்துகின்றது.

இந்தநியமனம் ரத்துச் செய்யப்பட வேண்டுமென விடுக்கப்பட்ட கோரிக்கை நிராகரிக்கப்பட்டுள்ளதால் வைத்தியர்கள் இன்று அடையாள வேலை நிறுத்தம் செய்ய தீர்மானித்துள்ளனர்.

(இ-21)


**வாழ்த்துகின்றோம்**

19-03-1998 அன்று சமாதான நீதிவானாகவும்
உத்தியோகப்பற்றற்ற நீதிவானாகவும்
சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட சட்டத்தரணி
**திரு. ஆ. க. நடராசா**
அவர்களையும்

சமாதான நீதிவானாக
சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட
**திரு. மு. சுந்தரலிங்கம்**
(தலைவர், வணிகர் சங்கம், நெல்லியடி)
அவர்களையும் வாழ்த்துகின்றோம்.

நண்பர்கள்
வ. கணேசமூர்த்தி, கா. ராமஜெயம்,
சி. சிவப்பிரகாசம்.

கரவெட்டி. (54320)



HATTON NATIONAL BANK LIMITED HNB

**யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் ஆதரவுடன்**

**யாழ். இந்துக்கல்லூரி சதுரங்கக் கழகம் நடத்தும்**

**பாடசாலை அணிகளுக்கிடையிலான ஐந்தாவது வருடாந்த**
**சதுரங்க (Chess) சுற்றுப்போட்டி - 1998**

JAFFNA HINDU COLLEGE

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்பும் பாடசாலைகள் 6 வீரர்களையும் 1 பதில் வீரரையும் கொண்ட அணிக்கான விண்ணப்பத்தினைத் தங்களின் பாடசாலை அதிபருக்கூடாக யாழ். இந்துக்கல்லூரிக்கு நேரடியாகவோ, தபால் மூலமாகவோ 17-04-1998 இற்கு முன்னர் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

குறிப்பு:

1. போட்டிகள் 16 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணி, பெண்கள் அணி, 16 வயதுக்கு மேற்பட்ட ஆண்கள் அணி, பெண்கள் அணி என நான்கு பிரிவுகளாக நடத்தப்படும்.
2. போட்டிகள் நடைபெறும் தினமாகிய 21-04-98 இல் வயது கணிக்கப்படும்.
3. ஒரு பாடசாலையிலிருந்து ஒரு பிரிவிற்கு இரு அணிகளுக்கு மேல் பங்குபற்ற முடியாது.
4. 21-04-1998 செவ்வாய்க்கிழமை முற்பகல் 9.00 மணிக்குப் போட்டிகள் ஆரம்பமாகும்.
5. மேலதிக விவரங்களுக்கு யாழ். இந்துக்கல்லூரி சதுரங்கக் கழகத்துடன் அல்லது யாழ். ஹற்றன் நஷனல் வங்கியுடன் தொடர்பு கொள்ளவும்.

யாழ். ஹற்றன் நஷனல் வங்கி,
யாழ்ப்பாணம்.

(சி/3205)



**JAFFNA COLLEGE INSTITUTE of AGRICULTURE**
MARUTHANAMADAM, CHUNNAKAM.

**யாழ்ப்பாணக் கல்லூரி விவசாய நிறுவனம்**
DIPLOMA IN AGRICULTURE
**விவசாய டிப்ளோமா பயிற்சி நெறி**

ஒரு வருட கால சாதனா, போதனா பயிற்சி நெறிக்கு க. பொ. த. (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்த 17 - 25 வயதுக்கிடைப்பட்ட சுய தொழிலாக மேற்கொள்ள விரும்பும் அல்லது தமது தொழில் வாய்ப்பைத் தேடிக் கொள்ள விரும்பும் ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இக்கற்கை நெறியில் விவசாய மூலதத்துவம், பயிரியல் மிருக பரிபாலனம், பூங்கனியியல், பண்ணை முகாமைத்துவம், கமப் பொறியியல் (ஆண்கள்), மனைப்பொருளியல் (பெண்கள்), ஆங்கிலம் ஆகிய பாடங்கள் போதிக்கப்படும்.

இப்பயிற்சி நெறிக் காலத்தில் உதவித் தொகை வழங்குவதுடன் பயிற்சி முடிவில் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

இப்பயிற்சி நெறியில் சேரவிரும்புவோர் 30-3-98 காலை 9.00 மணிக்கு எமது நிறுவனத்தில் நேர்முகப் பரீட்சைக்கு பிறப்பு அத்தாட்சிப்பத்திரம், கல்வித் தகைமைப்பத்திரம், கிராமசேவகரின் நற்சான்றிதழ், வேறு இரு நற்சான்றிதழ்கள் ஆகிய சான்றிதழ்களுடன் சமுகமளிக்கவும்.

மேலதிக விவரங்களுக்கு:

அதிபர்,
யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம்,
மருதனார்மடம், சுன்னாகம்.

(54318)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டு நிகழ்ச்சிகள்

யாழ். மாவட்ட கரப்பந்தாட்டச் சங்கம் நடத்தும் கரப்பந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபெற்றும் அணிகள் வருமாறு:-

இன்று

★ 3.00 மணி:- ஆவரங்கால் இந்து இளைஞர் வி.க. அணி எதிர் பாஷையூர் அன்ரனீஸ் வி.க. அணி.

★ 4.00 மணி:- ஆவரங்கால மத்திய வி.க. அணி எதிர் கோப்பாய் ஐக்கிய வி.க. அணி.

நாளை

★ 3.00 மணி:- அச்சுவேலி கலைவாணி வி.க. அணி எதிர் அரியாலைஜெயபாரதி வி.க. அணி.

★ 4.00 மணி:- மட்டுவில் யோகனதாஸ் வி.க. அணி எதிர் ஆவரங்கால் நவோதயா வி.க. அணி.

★ ★ ★

யாழ். மாவட்ட கூடைப் பந்தாட்டச் சங்கம் யாழ். பல்கலைக்கழக ஆடுகளத்தில் நடத்தி வரும் கூடைப் பநதாட்டச் சுற்றுப் போட்டியில் இன்றும் நாளையும் நடைபெறும் ஆட்டங்களில் பங்கு பற்றும் அணிகள் வருமாறு:-

இன்று

★ 3.30 மணி:- பற்றிஷியன் வி.க. அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் வி.க. ''பி'' டீ

★ 4.30 மணி:- யாழ். பல்கலைக்கழக கோல்ட்ஸ் அணி எதிர் ஒல்ட் கோல்ட்ஸ் வி.க. ''ஏ'' அணி

நாளை

★ 3.30 மணி:- ஜொனியன்ஸ் வி.க. அணி எதிர் யாழ். பல்கலைக்கழக நீல அணி

★ 4.30 மணி:- உதயன் வி.க. அணி எதிர் யாழ். பல்கலைக்கழககோல்ட்ஸ்அணி.

★ ★ ★

புதுவருடத்தை ஒட்டிய மரதன் ஓட்டப் போட்டியும் சைக்கிள் ஓட்டப் போட்டியும் முறையே எதிர் வரும் 4, 5 ஆம் திகதிகளில் காலை 6.30 மணி முதல் நடைபெறும் என யாழ். மாவட்ட விளையாட்டு அதிகாரி அறிவித்துள்ளார். இப்போட்டிகளில் பங்கு பற்ற விரும்புவோர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி விளையாட்டுத் துறைப் பொறுப்பாசிரியர் சண். தயாளனிடம் எதிர் வரும் முதலாம் திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களை ஒப்படைக்கும்படி கேட்கப்பட்டுள்ளது. (உ)

# ஓய்வூதிய வாழ்க்கைச் செலவுப்படி அடுத்தமாதம் வழங்கப்படுமா?

கொழும்பு, மார்ச் 26

ஓய்வூதியர்களுக்கான வாழ்க்கைச் செலவுப் படி நிலுவையை இவ்வாண்டு ஏப்ரல் மாத ஓய்வூதியத்துடன் சேர்த்து வழங்குமாறு நாடு முழுவதிலும் உள்ள ஓய்வூதியர்கள் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்திருக்கின்றன.

ஆயினும் ஏப்ரல் மாத ஓய்வூதியத்துடன் இதனை வழங்க முடியாது என்று ஓய்வூதியத்திணைக்கள இயக்குநர் திருமதி பி. என். பி. விஜயவர்த்தன தெரிவித்துள்ளார். திறைசேரியில் இருந்து உரிய நிதி தமக்குக் கிடைக்காமையினாலேயே இந்த நிலைமை என்றும் அவர் கூறினார்.

இது தொடர்பாக திறைசேரியுடன் தொடர்பு கொண்டு கேட்ட போது வாழ்க்கைச் செலவுப் படி நிலுவையினை ஏப்ரலில் வழங்க வேண்டும் என்ற கோரிக்கையைச் சாதகமாகப் பரிசீலிப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவுப் படி நிலுவையான 260 ரூபாவை 1999 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் வழங்க முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்தது. பின்னர் அதனை 1998 ஆம் ஆண்டு மே மாதத்தில் கொடுக்கத் தீர்மானிக்கப் பட்டது. இவ்வாறு 99 ஆம் ஆண்டு வழங்க இருந்ததை ஏழு மாதங்கள் முன்னதாக 98 ஆம் ஆண்டில் கொடுக்கத் தீர்மானித்ததனால் அரசாங்கத்திற்கு 91கோடி 80 லட்சம் ரூபா மேலதிக செலவு ஏற்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-ரீ)

## மீசாலையில்...

(முதலாம் பக்கத் தொடர்)

இவரது சடலம் இனம் காண்பதற்காக யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது.

சடலம் நேற்று உறவினர்களால் அடையாளம் காணப் பட்டது.

மீசாலையைச்சேர்ந்த கந்தசாமிகுணரட்ணம் (வயது 32) என்பவரே துப்பாக்கிச் சூட்டில் இறந்தவர் ஆவார்.

இவர் தமக்குத் தெரியாமலே வெளியில் சென்று விட்டார் எனவும் இவர் ஓர் மனநோயாளி எனவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது.

சடலம் பிரேத பரிசோதனையின் பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

(இ-15-139)

## பயணிகள்...

(முதலாம் பக்கத் தொடர்)

நகரங்களில் ஏற வசதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

## ஆரையம்பதி:..

(முதலாம் பக்கத் தொடர்)

வர் கே. நவரட்ணராஜா (றொபேட்) தனது வழமையான அலுவல்களில் ஈடுபட்டிருந்தார்.

இவர்மீது இலக்குவைத்துத் தான் விடுதலைப் புலிகள் அலுவலகத்துக்குள் நுழைய முயன்றிருக்கலாம் என்றும்—

அவரது பாதுகாப்பில் ஈடுபட்டவர்கள் விழிப்புடன் செயற்பட்டதால் அந்நோக்கம் முறியடிக்கப் பட்டதாகவும் —

தமது தாக்குதலால் விடுதலைப் புலிகளும் காயமடைந்திருக்கின்றார்கள் என்றும் ரெலோ வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-21)

## கொழும்பில்...

(முதலாம் பக்கத் தொடர்)

விடுவிக்கப்படுவார்கள் என்றும்—

கொழும்பு பிரதிப் பொலீஸ்மா அதிபர் ஸ்ரீசேன ஹேரத்தின் வழி நடத்தலோடு விசாரணைகள் நடத்தப்படுகின்றன என்றும்— தெரிவிக்கப்படுகின்றது.

அதேசமயம் நேற்று இரவு கொட்டாஞ்சேனையில் உள்ள பட மாளிகையில் படம் பார்த்துவிட்டு வந்தவர்களில் ஆண்—பெண்வேறுபாடின்றி50 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். (இ-7-8)

## திருமலை...

(முதலாம் பக்கத் தொடர்)

களுடன் சுலோகங்களைத் தாங்கியவாறு திருமலை முற்றவெளியில் இருந்து ஊர்வலமாகப் புறப்பட்டனர்.

ஊர்வலம் அரசடிப் பகுதியில் உள்ள புளொட் அலுவலகம் முன் நிறுத்தப்பட்டு அங்கு ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

கடத்தப்பட்ட ஓட்டோ சாரதியை விடுவிக்க நடவடிக்கை எடுப்பதாக பொலீஸார் உறுதி அளித்ததை அடுத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

ஓட்டோ சாரதிகளின் ஆர்ப்பாட்டம் காரணமாக [illegible] நகரில் ஓட்டோ சேவைகள் பாதிக்கப்பட்டிருந்தன. (இ -21)

# சீனி விநியோகத்தை சீராக்க நடவடிக்கை

## நேற்று மாநாட்டில் ஆராய்வு

யாழ்ப்பாணம், மார்ச் 26

இரு வாரங்களில் யாழ்ப்பாணத்தில் சீனி விநியோகம் சீராக நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

சீனி விநியோகம் தொடர்பாக நேற்று யாழ். நகர கொமாண்டர் பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் யாழ். மாவட்டத்திலுள்ள ப.நோ.கூ. சங்கங்களின் தலைவர்களையும், கூட்டுறவு அபிவிருத்திஆணையாளர் க.சண்முகநாதனையும் நேரில் அழைத்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்.

512 ஆவது பிரிகேட் அலுவலகத்தில்இச்சந்திப்பு இடம் பெற்றது.

யாழ். மாவட்ட சீனி விநியோகம் தொடர்பாக இச்சந்திப்பில் ஆராயப்பட்டது.

சில கூட்டுறவுநிறுவனங்கள் தமது எல்லையை விட்டு வெளியில் கொண்டு சென்று சீனியை விற்பனை செய்வதாக எமக்கு முறைப்பாடு கிடைத்துள்ளது. இது நிறுத்தப்பட வேண்டும் என்று பிரிகேடியர் சுஸந்த மெண்டிஸ் இச் சந்திப்பில் பிரஸ்தாபித்தார்.

'ச.தொ.ச.' வெள்ளை அரிசி கொள்வனவு செய்பவர்களுக்கு மட்டுமே சீனி விநியோகம் செய்கிறது. அத்துடன் தரமற்ற உள்ளியையும் மக்களிடம் செலுத்தி சீனி விநியோகம் செய்கின்றது. இது பொதுவான நடைமுறைக்கு மாறானது என்று ப.நோ.கூ. சங்கத்தின் தலைவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.

கொழும்பிலிருந்து பெருமளவு சீனியை யாழ்ப்பாணத்துக்கு எடுத்து வருவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதனால் சீனி விநியோகத்தினை எல்லாத் தரப்பினரும் இணைந்து சீராக விநியோகிப்பதற்கு ஒத்துழைப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது.

அதே சமயம் குடாநாட்டு மக்களுக்குத் தேவையான சீனி யாழ். செயலகத்துக்கு நேற்று வந்து சேர்ந்துள்ளதால் ப.நோ.கூ. சங்கங்கள் உடனடியாக இன்று யாழ். செயலகத்துக்கு வந்து இதனைப் பெற்றுச் சென்று பங்கீட்டு அட்டைக்கு விநியோகம் செய்யுமாறு கோரப்பட்டுள்ளது.

அத்துடன் சிவப்பு நாட்டரிசியும் போதியளவு எடுத்து வரப்பட்டுள்ளதனால் இவற்றையும் எடுத்துச் செல்லுமாறு யாழ். செயலக திட்டப் பணிப்பாளர் செ. மகாலிங்கம் அறிவித்துள்ளார்.

(இ-5-100)


எமது புதிய வெளியீடு!

பிரகாஸ்ராஜ் நடித்த

நாக வம்சம்

ஒறிஜினல் வெளியீடு!

பெரிய கவுண்டர் பொண்ணு

புதிய போஸ்டர்கள் விற்பனைக்குண்டு.

வீடியோ விமல்

யாழ்ப்பாணம்.

(சி/3208)


# நரமற்ற உணவுடன் சென்ற அகதிகள்

## எம்.பியிடம் முறையீடு

வவுனியா, மார்ச் 26

வவுனியா வேப்பங்குளம் அகதி முகாமில் தங்கியுள்ள அகதிகள் தமக்கு நேற்று முன்தினம் இரவு வழங்கப் பட்ட உணவு தரமற்றதாக இருந்ததாகத் தெரிவித்து வழங்கப்பட்ட உணவுடன் சென்று வன்னி மாவட்ட புளொட் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். சண்முகநாதனைச் சந்தித்தனர்.

அவர் உடனடியாக வவுனியா அரச அதிபர் உட்பட முக்கிய அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு இது விடயமாக பிரஸ்தாபித்தார்.

(இ-164-3)

# சட்டவிரோதமாக சாராயம் காய்ச்சியோர் நீதிமன்றில்

யாழ்ப்பாணம், மார்ச் 26

சட்டவிரோதமான முறையில் சாராயம் தயாரித்தமை, விற்பனை செய்தமை ஆகியகுற்றச்சாட்டின் பேரில் ஐவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்ட போது நீதிவான் அவர்களுக்கு அபராதம் செலுத்துமாறு தீர்ப்பு வழங்கினார்.

தென்மராட்சி மதுவரி நிலையப் பொறுப்பதிகாரி ரொகான்ராஜீ தமது எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் திடீர்ப் பரிசோதனை நடத்திய போது இவர்கள் சிக்கினர்.

கின்னத்துரைபூமணிதேவி, சிவலிங்கம் சிவராசா, பசுபதிப்பிள்ளை கதிர்காமநாதன், கந்தையா சிவராசா, சின்னையா அன்னரட்ணம் ஆகியோருக்கே சாவகச்சேரி நீதிமன்றில் நீதிவான் அபராதம் விதித்து தீர்ப்பு வழங்கினார். (ஐ-9)

# வெப்பம், அனற்காற்று ஏப்ரல் வரை நீடிக்கும்

கொழும்பு, மார்ச் 26

நாட்டில் காணப்படும் கடும் வெயிலும் அனற் காற்றும் இவ்வாண்டு ஏப்ரல் மாதம் வரை காணப்படும் என்று கொழும்பில் காலநிலை அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

பசுபிக் சமுத்திரத்தில் காணப்படும் 'எல்-நைனோ' கால நிலையின் பாதிப்பாலேயே இலங்கையில் இவ்வாறு கடுமையான வெயிலும், அனற் காற்றும் ஏற்பட்டுள்ளதாக காலநிலை அவதானிகள் தெரிவித்தனர்.

நாட்டில் காலநிலை இவ்வாறு உள்ள போதிலும் நாட்டின் தென்மேற்குப் பகுதியில் மாலை வேளையில் இலேசானமழைபெய்யும் சாத்தியமும் உண்டு என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-ரீ)

# அனுரா - றொனி தகராறு: தீர்ப்பதற்கு ரணில் முயற்சி

ஐ.தே.க. தலைவர்களான றொனி டி மெல்லுக்கும், அனுராபண்டார நாயக்கவுக்கும் இடையில் உருவாகியுள்ள நெருக்கடி நிலை குறித்து சமாதான முயற்சியை ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்க நேற்று மேற்கொண்டார்.

அந்த முயற்சி பயன் அளிக்கவில்லை என்றும்—

தொடர்ந்தும் இருவருக்கும் இடையில் சமாதானம் ஏற்பட பேச்சுக்கள் இடம் பெறவுள்ளதாகவும்—ஐ.தே.க. வட்டாரங்கள் தெரிவித்தன.

றொனி டி மெல்லும், அனுரா பண்டார நாயக்கவும் எதிர் எதிராக அறிக்கைகள் வெளியிட்டுவருவது தென் இலங்கை அரசியலில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மஹோற்சவம்

நல்லூர் பாணன் குளம் நாச்சியம்மன் ஆலய வருடாந்த மஹோற்சவம் எதிர் வரும் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. எதிர்வரும் 11 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-4)

## முகாமை...

(முதலாம் பக்கத் தொடர்)

ளேயே தங்கிவிட்டனர்

அகதிகள் வரமறுத்தபோது அந்த முகாமில் இயங்கிய செயலக நலன்புரிக் கிளையின தமது அலுவலகத்தை மூடிவிட்டு பொருள்களை அந்த பஸ்களில் ஏற்றி வேறு முகாமுக்குச் சென்றனர். (இ-164-4)

# மரண அறிவித்தல்

## அருணாசலம் பாக்கியம்

மாப்பாணவூரி காரைநகரைச் சேர்ந்த அருணாசலம் பாக்கியம் மல்லாவியில் காலமானார்.

இவர் அருணாசலம் தம்பதிகளின் அன்பு மகளும், தனநாயகத்தின் (ஜேர்மனி) அன்புத் தாயாரும், அருணாசலம் (மலேசியா), ராஜதுரை (மலேசியா), பத்மராணி (நவாலி), தபோதினி (மல்லாவி) ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மல்லாவியில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
அ. சிவராசா
(பெறாமகன்)

56, அம்மன் றோட்,
கந்தர்மடம்.

(54323)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 26-03-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org